# ஜகன் மோகினி

மார்ச்
1955

JAGAN MOHINI

ESTD. 1923

அணா
நான்கு

1726

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
31 MAR 1955
MADRAS

மஹாகவி காளிதாஸரும்
அவரது இதயராணி சந்திரகலேயும்



1726
1-55

அரிய தமிழ் விருந்து

# உதயசூரியன்

வை. மு. ஸ்ரீநிவாஸன், M.A.B.L
முதல் நவீனம் - ரூ. 1-4-0

1. மங்களபுரியில் மகிழ்ச்சி உதயம் 2. நாமகரணமும் நாற்பது திங்களும் 3. மங்களபுரியின் மூன்று திலகங்கள் 4. ஜீவியச்சுழலில் சோதனையின் கொடுமை 5. புயலும் அமைதியும் 6. குருகுல வாசமும் குமரனின் உள்ளமும் 7. ராஜ்யாபிஷேகமும் ராஜயபாரமும் 8. காதல் போதனை —கம்பன் வர்ணனை 9. எதிர்பாராத சம்பவம் 10. அதிர்ச்சியும் வைராக்யமும் 11, இதய ஒலி 12. போர்க்களத்தில் மனப்போர் 13. உணர்ச்சி வெள்ளம் 14. இருண்டவானம் 15. உதய் சூரியன். [ஸ்ரீசுத்தானந்தரின் முகவுரையுடன்.]

# மதமா, மனமா?

வை. மு. ஸ்ரீநிவாஸன், M.A.B.L
இரண்டாவது நவீனம் - ரூ. 1-4-0

1. சேற்றில் முளைத்த செந்தாமரை 2. அகமலர்ச்சியும் ஆபத்தும் 3. பரபரப்பும் பரிதவிப்பும் 4. வாழ்வும் தாழ்வும் 5. சோகமும் வேகமும் 6. இடியும் மின்னலும் 7. பிரசாரமும் விசாரமும் 8. அன்றும் இன்றும் 9. அலறலும் ஆறுதலும் 10. கண்கொள்ளாக் காட்சி 11. விளம்பரமும் விபரீதமும் 12. மனக்கண்ணுடியே உலகம் 13. இன்னலைப் புன்னகைப்போம் 14. உயிர் நிலை — உயர் நிலை 15. பொருள்—அருள்—அமைதி 16. மனதின் சூக்ஷ்மாணுக்கள் 17. அருள் நிலத்தில் அமரானந்தப் பயிர் 18. அவனியில் யாவும் அவனுலே 19. காதல் விளக்கம்—அன்பின் தாயகம் 20. மதமா, மனமா?—மனத்திருவிளையாடல்.

# அவஸரமூர்த்தியின் அபூர்வ டயரி

வை. மு. ஸ்ரீநிவாஸன், M.A.B.L
மூன்றாவது சித்திரம் - ரூ. 1-8-0

1. நவீன ப்ரஹ்மதேவன் 2. நவீனங்களின் முன்னோர் 3. கடவுள் இருக்கிறார்! 4 ப்ரமித்துவிட்டோம்! 5. கீர்த்தனமௌி! 6. ஒரு வாரம் 7. ஸர்வம் ஸங்கீதமயம் 8. இந்திரனின் புதல்வன் 9 ஸ்ரீ க்ருஷ்ணும்ருதம் 10. கண்கொள்ளாக் காட்சி 11 அன்பின் ஆற்றல் 12. வாழ்வின் மேடு பள்ளங்கள் 13. எதிர்பாராத அநுபவம் 14 பொன் விழா 15 ஆறுதலும் கிளர்ச்சியும் 16 திருப்பதி யாத்திரை.

ஜகன்மோகினி, மலர் 32, இதழ் 3.


| | | | |
|---|---|---|---|
| காஷ்மீர் பிரச்னை | 1 | காளிதாஸர் கனவு | 16 |
| மேனாட்டுத் தத்துவம் | 2 | ஆன்ம தத்துவம் | [illegible] |
| பாவர் மோகினி | 6 | ஸந்த்யாராகம் | 22 |
| பாட்டி சொன்ன பழங்கதை | 8 | அனுபவ நிதி ஸாரம் | 27 |
| புனித யாத்திரை | 9 | வாழ்க்கை தீபம் | 28 |
| இசைப் பகுதி | 14 | ஒரு பக்கக் கதை | 32 |
| | | துப்பறியும் ராஜாராம்நாயுடு. பக்கம் | 27-42 |


OFFICE OF THE REGISTRAR OF ... MADRAS 31 MAR 1955

## காஷ்மீர் பிரச்னை.

ஜம்முவில் கடந்த பிப்ரவரி 19, 20, 21 தேதிகளில் கூடிய **ப்ரஜா பரிஷத் காரியக்கமிட்டி** இந்திய காஷ்மீர தொடர்பு குறித்து சில முக்யமான தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளது. காஷ்மீர மக்களின் மனதைக் கண்ணாடியில் காட்டுவதுபோல் ப்ரதிபலிக்கச் செய்கின்றன இத்தீர்மானங்கள். இவையே காஷ்மீரத்தின் இதயத் துடிப்பு எனலாம்.

"தேசநலனைக் கருத்திற்கொண்டுள்ளோமேயன்றி, கட்சி மனப்பான்மை கொள்ளவில்லை. பரந்த அடிப்படையில்,—கட்சி, மதம் என்ற பாகுபாடின்றி—மக்கள் அனைவர் நலனையும் கருதியே எமது ப்ரஜா பரிஷத் உழைக்கிறது" என்ற உறுதிப்பாட்டை வெளியிட்டிருப்பதைப் பாராட்டுகிறோம்.

"இந்திய யூனியனுடன் காஷ்மீர ராஜ்யம் இணைந்ததானது, பொதுஜனங்களின் பூரண ஆதரவு பெற்றேயென்பதை முன்னிட்டு, இனி அப்பிரச்னையைப் புனராலோசனை செய்ய அவசியமேயில்லை. மக்கட்தலைவர் என்ற முறையில் ராஜ்யாதிபதியும் அந்த இணைப்புத் தீர்மானத்துக்கு உடன்பட்டிருக்கிறார்."

"ஸமஸ்தானத்தில் நிலவும் நல்ல சூழ்நிலையைக்குலைத்து, கலவரத்தையும் பிளவையும் உண்டாக்கி, ஷை இணைப்புப் பிரச்னையைக்குறித்து புனராலோசனைக்கு இடமிருப்பதுபோல் தோன்றச் செய்வதில் விஷமிகள் ஈடுபட்டிருக்கின்றனர்.

"காஷ்மீரை யுத்த பூமியாக்கி, அதன் முக்கிய ஸ்தலங்களை **ராணுவ உயிர்நிலை** தளங்களாகச் செய்வதில் சில வல்லரசுகளுக்கு நோக்குண்டு. ஸர்வதேசிய சதுரங்கத்தில் எங்கள் ராஜ்யத்தை ஒரு பொம்மையாக வைத்து விளையாட விடமாட்டோம்."

"சூழ்ச்சி—உள்நாட்டிலோ, வெளியிலிருந்து தூண்டப்படுவதோ, எதுவாயினும்—தலைதூக்க விடமாட்டோம். இந்திய யூனியனும் கண்டிப்பான நடவடிக்கை எடுக்க வேண்டும். யூனியனின் பல்வகைச் சமுதாய நல திட்டங்களைக் காஷ்மீருக்கும் பரப்பி, **எல்லோரும் இந்திய மக்கள்** என்பதை உலகுக்கு உணர்த்த வேண்டும்..."

ப்ரஜா பரிஷத் மக்கள் மனோநிலையைப் படம் பிடித்துக் காட்டுவது இவ்விதம்; ஆனால், அலி—நேரு சந்திப்பில் நடக்கப்போவதோ—கடவுளுக்குத்தான் வெளிச்சம்!

—**வை. மு. ஸ்ரீ.**


## உங்கள் குழந்தையின் அழகை அதிகரிக்க!

**சாதாரணமாக ஒரு குழந்தையின் நிறமும் அழகும் அதன் தாய் தந்தையரைப் பொருத்தது என்றே கூறுவர். ஆனால் எங்கள் விசேஷ ஆராய்ச்சியின் பயனாய்க் கண்டுபிடிக்கப்பட்டுள்ள "வ்ருஹத் காந்தி"யைக் கர்ப்ப ஸ்த்ரீக்கு நான்காவது மாதத்தில் கொடுத்தால், அதன் விளைவாக, கர்ப்பத்திலுள்ள சிசு விசேஷகாந்தியைப் பெற்று, நல்ல நிறத்துடனும் அழகுடனும் பிறந்து, மட்டற்ற மகிழ்ச்சியளிக்கும். பலனளிக்காவிடில், பணம் வாபஸ் செய்யப்படும். விலை ரூ. 8-8-0. தபாற்செலவு 0-15-0. ஹிந்தி அல்லது ஆங்கிலத்தில் ஆர்டர் செய்யவும்:—**

காந்தி பார்மஸி, விருந்தாபன் கேட், மதுரா, (உத்தர் ப்ரதேச்.)

**Kanty Pharmacy, Vrindaban Gate, MATHURA (U.P.)**

# மேனாட்டுத் தத்துவம்

## இரண்டாம் பாகம்

## 1. சாக்ரடீஸ் (470-399 கி.மு.)

ரா. ஸ்ரீ. தேசிகன், எம்.ஏ.

சென்ற இதழ்த் தொடர்ச்சி

### சாக்ரடீஸ் கண்ட தத்துவ ஆராய்ச்சி

பேரமைதியை அடைந்தார் சாக்ரடீஸ் என்பது உண்மையே. இத்தகைய தெய்வ அமைதியை அடைந்த சாக்ரடீஸ் மனத்தில் பெரும்பூசல்கள் புயல் அடித்திருக்க வேண்டும் என்று தெரிகின்றது. சாப்பிரிஸ் (Zopyrus) என்ற சாமுத்திரிகாலக்ஷணம் கூற வல்லோன் சாக்ரடீஸ்ஸின் முகத்தைப் பார்த்து...வதனத்தைப் பார்த்தால்...ஆசாபாசங்கள் நிரம்பிய வதனம்போலத் தோன்றுகின்றதே...என்று சொல்லக் கேட்ட பலர் திடுக்கிட்டனர். ஆனால் சாக்ரடீஸோ சாப்பிரீஸ் கூறினது உண்மையே என்று மொழிந்தார். "என் மனத்தில் போராட்டங்கள் நிகழ்ந்தன; அவைகள் யாவையும் என் ஆத்ம வலியால் வென்றேன். இதில் சந்தேகம் வேண்டாம்' என்று உண்மையை வெளியிட்டார். நம்மாழ்வார் மனத்திலேயே போர்களும் பூசல்களும் நிகழ்ந்திருக்குமாயின், மற்றவர்களைப்பற்றி நாம் பேசவேண்டியதில்லை.

ஆவிதிகைக்க ஐவர்குமைக்கும் சிற்றின்பம்
பாவியேனைப் பல நீ காட்டிப் படுப்பாயோ?
தாவிவையம்கொண்ட தடக்தா மரைகட்கே
கூவிக்கொள்ளும் காலம் இன்னம் குறுகாதோ.

எத்தகைய வேதனையிலிருந்து இப்பாட்டு வழிந்திருக்கும் என்பதை உன்னிப்பாருங்கள்.

ஓர் இரவில் ஒருவனும் ஞானியாக முடியாது....ரோமாபுரி ஒரு நாளில் உதயமாகவில்லை என்றெல்லாம் கேட்டிருக்கிறோமல்லவா?

ஞானி அகஸ்டைன் டால்ஸ்டாய், மகாத்மா காந்தி—இவர்களுடைய வாழ்க்கைக் குறிப்புக்களைப் பார்த்தோமானால், அவர்கள் அஞ்ஞான இருளோடும், பஞ்சேந்திரிய அசுரர்களோடும் எப்படி இடைமருத கடும் போர்கள் புரிந்தார்கள் என்ற உண்மை புலனாகும். சாக்ரடீஸ் போர் புரிந்தே தம் உள்ளக்கோட்டையில் ஞான வெற்றிக்கொடியை நாட்டிவிட்டார்.

மனிதனின் கெடுதல்கள் யாவும் அஞ்ஞானத்தால் வருகின்றன. இத்தகைய நோய்களுக்கு மருந்து ஞானந்தான் என்று சாக்ரடீஸ் கூறுகின்றார்.

183189

ஞானம் உள்ளவர்களும் பிழைகள் செய்கின்றார்கள் என்று ஒருவர் கூறலாம். அப்படிப் பிழை செய்வார்களேயாகில், அவர்களுக்கு ஞானம் இன்னும் வரவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். இது நல்ல மரமோ, அல்லது கெட்ட மரமோ? எப்படி சொல்ல முடியும். அதன் பயனைக்கொண்டுதானே நாம் முடிவுக்கு வர முடியும்? அதைப்போல மனிதனுடைய நற்செயல்களைக் கொண்டும், நற்செயல்களுக்குக் காரணமான தூய உள்ளத்தைக் கொண்டும், அவன் யோக்கியன் என்ற உண்மையைக் கண்டு கொள்ளுகிறோம். ஒரு பாகவதர் பகவத்விஷயம் சொல்லுகின்றார். கிதைக்குப் பல்லாயிர அர்த்தங்களைத் தர்க்கரீதியில் கூறுகின்றான் ஒருவேதாந்தி. உபந்நியாசங்கள் முடிந்தபிறகு, இவ்விருவரும் விலைமகள் கதவைப் போய்த் தட்டப்பார்க்கின்றோம். வெறும் உபந்நியாசம் பண்ணினால் ஞானம் வந்துவிட்டதாக நாம் நினைக்கின்றோமே அது நம் பிழை. அவர்கள் பிழையன்று. புத்தகங்களிலுள்ள விஷயங்களை மனப்பாடம் செய்துகொண்டு கண்டோர் வியக்கப் பேசுகின்ற கயவர்கள் அவர்கள். புத்தகங்களுக்கும் அவர்களுக்கும் வித்தியாசமில்லை. நூல் நிலையத்தை ஞானிகள் என்று சொல்லி விடலாமே. ஆனால் புத்தகங்கள் தீங்கிழைக்கா, வாசாகைங்கர்யம் செய்யும் நீசர்கள்போல். அந்த அளவில் புத்தகங்கள் போற்றுதற்குரியவை.

சங்கரர் ஞானத்தால்தான் முக்தி வரும் என்கிறார். இதன் உண்மையை மக்கள் சரிவர உணரவில்லை. வெறும் ஏட்டு ஞானத்தை இவர் குறிக்கவில்லை. ஆண்டவனை நேரில் காண்கின்ற ஞானத்தைப்பற்றி இவர் பேசுகின்றார். ஞானம் வேறு, பக்தி வேறு என்று பிரிப்பதே வெறுந் தவறாகும். ஞான மில்லாதவனுக்கு பக்தியிருக்க இடமில்லை. பக்தி இல்லாதவன் கர்மா செய்ய முடியாது. ஞான வேரிலிருந்துதான் பக்தி அரும்புகின்றது.

இந்த பக்திதான் மலர்ந்து காய்த்துப் பழுத்துக் கர்மா வாய்த் திகழ்கின்றது. கைங்கரியந்தான் முடிவு என்று வைணவர்கள் சொல்லுவதில் எத்தனை பொருத்தமிருக்கிறது பாருங்கள். கிதையில் பரத்தைப் பார்த்தபிறகே எல்லாச்சுவைகளும் ஒடுங்குகின்றன என்று கூறப்பட்டிருக்கிறது. ஞானப்பெருந்தீயில்தான் நம் தீய எண்ணங்கள், தீயச்செயல்கள் எல்லாம் வெந்து சாம்பராய்ப் போகின்றன.

இத்தகைய ஞானத்தைப்பற்றித்தான் சாக்ரடீஸ் பேசுகின்றார். இந்திரியங்கள் அடங்கி, ஆத்ம ஞானம் பெற்ற அச்சான்றோன் ஞானந்தான் எல்லாக் கலியாண குணங்களுக்கும் ஆதாரம் என்று சொன்னதில் வியப்பில்லை. பேருண்மையை நாடி அவர் நீண்ட யாத்திரை செய்தார். அந்த யாத்திரையின் அனுபவ ஆற்றலை வைத்துக்கொண்டு அவர் தைரியமாய்க் கூறுகின்றார். அவர் செய்த உபதேசத்திற்கு அவர் வாழ்க்கையே ஒரு மகா வியாக்யானமாய்த் திகழ்கின்றது. அவர்

வாழ்க்கை அவர் ஞானத்தை முரசடிக்கின்றது. தாம் கண்ட உயர்ந்த தத்துவத்தைத்தானே அவர் உலகத்திற்கு அளிக்க முடியும். ஞானத்திற்கும் நல்லொழுக்கத்திற்கும் முரண்பாடில்லை. ஞானமே நல்லொழுக்கம்...நல்லொழுக்கமே ஞானம் என்று தம் வாழ்க்கையில் காட்டிய அப்புனிதனை நாம் சென்னி சாய்த்து வணங்காமலிருக்க முடியுமோ?

சாக்ரடீஸ் பௌதிக சாத்திரத்தில் தம் காலத்தைக் கழிக்கவில்லை. அச்சாத்திரத்தை அவர் உள்ளம் நாடவில்லை. 'உன்னை அறிந்துகொள்' அதுவே போதும் என்ற உபதேசத்தை அவர் புரிந்து வந்தார். விண்ணிலுள்ள வெய்யோனைப்பற்றியோ, தளிர்மதியைப்பற்றியோ தாரா கணங்களைப்பற்றியோ அவருக்குக் கவலையில்லை. மனிதனுக்கு உய்ய இடமுண்டா? என்ற ஒரே கேள்விதான் அவர் சிந்தையில் ஒலித்துக்கொண்டிருந்தது. மனிதன் கொண்ட கொள்கைகளையெல்லாம் துருவி ஆராய்ந்து பார்த்தார். குணங்களுக்கு இலக்கணம் வகுக்க முயன்றார்.

பிளேட்டோஎழுதிய கார்மிடீஸ் (Charmides) என்ற சம்பாஷணையில் 'மிதம்' (Temperance) என்றால் என்ன? என்ற ஆராய்ச்சி நடக்கின்றது. இலிசிஸ் (Lysis) என்ற பகுதியில் 'நட்பு' என்ற விஷயம் சிந்தனைக்கு விருந்தளிக்கின்றது. 'லாக்கிஸ்' (Laches) என்ற பகுதியில் 'தைரியம்' என்ற பொருள் சிந்திக்கப்படுகின்றது. ஆனால் ஒரு சர்ச்சைகூட முடிவு அடைந்த சர்ச்சையாய்க் காட்சி அளிக்கவில்லை. இது அன்று; இது அன்று; அது அன்று; அது அன்று;—என்ற 'நேதி' வாக்கியமாயிருக்கிறதே தவிர வேறொன்றையும் காணோமே என்று ஒருவர் சொல்லலாம்.

இதிலிருந்து புலப்படுகிற விஷயம் இதுதான். சாக்ரடீஸ் எதையும் ஏற்றுக்கொள்ளுகிறதில்லை. ஏதோ தெரிகிறதுபோலத் தோன்றுகிற விஷயங்களிலும் தெளிவில்லை என்ற உண்மையை அவர் உலகத்திற்கு எடுத்துக் காட்டினார். ஞானத்தின் எல்லையைத் தேர்வதைவிட ஞானத்தைத் துரத்திச் செல்வது இன்பமென்று நினைத்தாரோ தெரியவில்லை. எல்லாம் தெரிந்துவிட்டால், இன்பந் தெரியாது. எத்தனை தரம் துருவி ஆராய்ந்தாலும் சிந்தனைக்கு எட்டாத ஒரு பொருள்தான் நமக்குத் தெவிட்டாத மகிழ்ச்சி தரும். அந்தப்பொருள்தான் கடவுள். எல்லாச் சர்ச்சைகளுக்கும் அந்தப் பொருள் இடம் தரும், ஆனால் ஒரு சர்ச்சைகூட அந்தப் பொருளை நண்ண முடியாது. இதுதான் கடவுளுக்கு இலக்கணம் என்றார் ஒருவர். கடவுளைப்பற்றிய பெரிய விஷயத்திலுஞ்சரி, அல்லது அற்ப விஷயத்திலுஞ்சரி, ஆராய ஆராய நம் அஞ்ஞான இருள்தான் மேன்மேலும் விரிகின்றது. இந்தத் தத்துவத்தைக் கண்டுவிட்டார் சாக்ரடீஸ் என்று சொன்னால் மிகை ஆகாது.

சாக்ரடீஸ் புரிகிற அர்த்தவாதம் (Dialectic) சில விஷயங்களில் மட்டுந்தான் செய்ய முடியும். பௌதிக சாத்திரத்தில் இதை நடத்த முடியாது என்று ரசல் கூறுகின்றார். இது உண்மையே. பௌதிக சாத்திர உண்மையை வெறுஞ்சொல்லால் சோதிக்க முடியாது. அதைக் கண்ணுக்கு நேராகவே சோதனை (Exper-i

ment) செய்யவேண்டும். கண்கொண்டு பார்க்கும் பரீட்சை அது! புலன் நெறிக்கு அப்பாலுள்ள பொருள் சுகம்பற்றிப் பௌதிகப் புலவன் கவலைப்படுகிறதில்லை. அதையும் ஓர் உண்மையாக அவன் கருதுகிறதில்லை. தற்காலத்தில் சில பௌதிகப்புலவர்கள் புலனுக்கு அப்பாலும் உண்மை தோன்றலாம் என்றதை ஒப்புக்கொள்ள ஆரம்பித்திருக்கின்றனர்.

பிளேட்டோவின் சம்பாஷணைகளை ஆராய்ந்தோமானால் உண்மையை நாடும் சாக்ரடீஸின் பசிதாகம் தெரியும். உண்மைதான் அவர் உண்ணுஞ்சோறும் பருகுநீரும் தின்னும் வெற்றிலையுமாகும். மேலும் அறிவு என்பது நினைவுதான் என்று சாக்ரடீஸ் கூறுகின்றார். இந்தக் கொள்கையைப் பிளேட்டோ விரிவுபடுத்தி மொழிகின்றார். இப்பொழுது நமக்கு விளங்குகிறதெல்லாம் ஒரு காலத்தில் நாம் நேரில் கண்டு நுகர்ந்தவைகளே. ஆத்மாவுக்கு முந்தியும் தொடர்புண்டு, பிந்தியும் தொடர்புண்டு. இந்த ஆத்மா பரமாத்மாவுடைய அம்சம். பரமாத்மாவோ எங்கும் வியாபித்திருக்கிறார். அவர் சர்வசக்தர், சர்வவியாபி, ஞானவடிவாயுள்ளவர்.

அந்தக் கடவுளை எப்படி வழிபடுவது என்று சாக்ரடீஸை வினவினபொழுது நாட்டிலே எந்தச் சம்பிரதாயமிருக்கிறது, அதன்படி நடக்கவேண்டும் என்றார். ஆனால் பக்தியோ ஆடம்பரமான சடங்குகளிலில்லை. பகவானுக்கு அளிக்கப்படும் வயிர அங்கியிலும், தங்கக்கவசத்திலும் பக்தி தங்கி நிற்கவில்லை. உள்ளன்போடு அளிக்கப்படும் தீர்த்தத்திலும், பழத்திலும் பூவிலுந்தான் காட்சி அளிக்கின்றான். அளிக்கப்படும் பொருளைச்சுற்றி அந்த அன்பில்லை. அளிப்போனுடைய தூய உள்ளத்தில்தான் அவன் வீற்றிருக்கிறான்.

நாள் வழங்குகிறது அற்பமான பொருளாயிருந்தாலும், ஆடம்பரமாய் அளிக்கின்ற செல்வர்களுடைய காணிக்கைகளுக்கு அது குறைந்ததன்று என்று அவர் சொல்லுவார். இதிலிருந்து நமக்கு உண்மை விளங்கவில்லையா? கம்பன் என் ஆராதனை என் அறியாமை ஒன்றுமே என்று சொன்னதாகத் தெரிகின்றது. பகவானுக்கு நாம் என்ன அளிக்கமுடியும்? அவனுக்கு இல்லாததைத்தான் நாம் அளிக்கவேண்டும். அவனிடத்தில் இல்லாதது அஞ்ஞானந்தான். அதைத்தான் நாம் காணிக்கையாகக் கொடுக்கவேண்டும். அவனுக்குக் கொடுப்பதெல்லாம் நம்முடைய செய்நன்றியைக் காட்டுதல் பொருட்டே; வேறொன்றுமில்லை. நம்முடைய சரீரங்கூட நமக்குச் சொந்தமில்லை. அவன் சொத்தையே நாம் அவனுக்குச் சமர்ப்பணஞ் செய்கின்றோம்.

அவன் ஞானம்கொண்டே அவன் அருளால் அவன் தாள் வணங்குகின்ற மனப்பண்பே உத்தம மனப்பண்பாகும். தீங்கிழைக்கின்றவர்களுக்கு அவர் நாண நல் நயம் செய்துவிடுதலே அறமென்று சாற்றின சான்றோனின் பெருமையை என்னென்று இயம்புவது. எசுநாதருக்கு முன், என் திருவள்ளுவருக்கு முன்— உபதேசம் செய்த உத்தமன் அடிச்சுவட்டைப் பின்பற்றிய பிளேட்டோவின் தத்துவத்தைப் பின் ஆராய்வோம். (தொடரும்)

தொடர்கதை

வை. மு. பத்மினி ஸ்ரீநிவாஸன்

# பாலர் மோகினி

## மாயக் கிளி

ஐந்து வருடம் கடுகைப்போல் உருண்டோடியது. இந்திரா, சந்திரா ஐந்து வயது நிறையப்பெற்று கல்வி கற்கும் பருவத்தை அடைந்தார்கள். சுபமுகூர்த்தத்தில் சிறந்த ராஜகுருவைக் கொண்டு அக்ஷராப்யாஸம் சிறப்பாய் நடந்தது.

ராஜஸிம்ஹன் தன் பெண்களுக்கு உலகத்தில் இருக்கும் சகல வித்தைகளையும் கற்றுக்கொடுத்து சகலகலாவல்லபைகளாய்ச் செய்துவிட வேண்டும் என்று துடித்தான். கத்திச்சண்டை, குதிரை சவாரி உள்பட சகலமும் கற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்து சிறு குழந்தை முதலே பழக்கத் துடங்கினான்.

புலி வயிற்றில் பிறந்தது பூனை ஆகுமா? ராஜஸிம்ஹன் வயிற்றில் பிறந்த இளவரசிகள் பதினாறு வயதிற்குள் சகலமும் கற்று தந்தையின் மனதைப் பூரிக்கச்செய்தார்கள். சகோதரிகள் ஒருவருக்கொருவர் போட்டியிட்டு ஒருவருக்கொருவர் சளைத்தவர்கள் இல்லை என்று ஸ்தாபித்தார்கள். இவர்கள் போட்டியை இன்னும் அதிகப்படுத்த குருவின் குமாரன் சாருகேசனும் இவர்களுடனே சகல கலைகளையும் கற்று இவர்களை மிஞ்சிவிட வேண்டும் என்று போட்டியிட்டுக் கற்கலானான். குருகுமாரனை வெல்ல வேண்டும் என்று இளவரசிகள் இன்னும் ஊக்கத்துடன் கலைகளை ஊன்றிக் கற்கலானார்கள். மூன்று பேரும் வித்யாசமின்றி ஒற்றுமையாய், பொறுமையில்லாமல் படித்தார்கள்.

ஒரு தினம் காலை ஆறு மணிக்கெல்லாம் இளவரசிகள், குரு குமாரன், குரு நால்வருமாய் குதிரைகளின் மேல் ஏறி 'சவாரி' புறப்பட்டார்கள். ஒவ்வொரு குதிரையும் தட்டிவிட்ட மாத்திரத்தில் காற்று வேகம் பறக்கும் சிறந்த குதிரைகள். குரு, சிஷ்யர்களை அழைத்து, நான் முதலில் குதிரைமீதேறி குறிப்பிட்ட இடத்தைச் சேரப்போகிறேன். நீங்கள் மூவரும் ஒன்றாய்க் கிளம்பி யார் என்னை முதலில் அடைகிறீர்களோ அவர்களுக்கு ஒரு சன்மானம் அளிக்கப்போகிறேன் என்று சொன்னார். மூவரும் சந்தோஷமாய் குதிரையின் மேல் ஏறி தயாரானார்கள். குரு தன் குதிரையைத் தட்டி விட்டார். குதிரை புறப்பட்டது தெரிந்ததே தவிர, இமை அசையும் பொழுதில் மறைந்து விட்டது. இவர்கள் ஆச்சர்யத்துடன் ஏக காலத்தில் குதிரைகளைத் தட்டி விட்டார்கள். குதிரைகளும் தங்கள் சாமர்த்யம் பூராவும் காட்டி பறக்கத் தொடங்கின.

குதிரைகள் மைல் கணக்கில் போய்க்கொண்டே இருக்கின்றனவே தவிர குருவின் குதிரை தென்படவே இல்லை. செல்லச்செல்ல அதன் பாதை ஒரு காட்டில்கொண்டு விட்டது. இளவரசிகள் காடுமேடுகள் பார்த்தே அறியாததால் அவர்களுக்கு இம்மாதிரி செல்வது ஆநந்தமாய் இருந்தது.

மணிக்கணக்கில் ஓடிய குதிரைகளும் சோர்வடைந்தனவே தவிர குரு கிடைக்கவே இல்லை. இளவரசிகளும் சோர்வுற்று குரு குமாரனை நிற்கும்படி ஜாடை காட்டினார்கள்.

குரு குமாரனுக்கோ சோர்வுடன் இல்லாது ஒருவித பயமும் கவலையும் சேர்ந்து பாதித்தது. இந்தக் காட்டுப்பாதையில் இள

வரசிகள் ஒருவித பந்தோபஸ்தும் இல்லாது தனிமையில் தன்னுடன் இருப்பது அவனுக்குத் தலைச் சுமையாய்த் தோன்றியது. அவர்கள் ஒருவித கவலையும் தெரியாது குதிரையைவிட்டு இரங்கி காட்டைப்பார்க்கக் கிளம்பினார்கள். குரு குமாரன் இவர்களைவிட நாலு, ஐந்து வயது பெரியவன் ஆனதால் இளவரசிகளை ஒரு வித ஆபத்தும் இல்லாது அரண்மனையில் சேர்க்கவேண்டுமென்று அதிக கவலை கொண்டான். அதுவும் இல்லாது அந்தக் காட்டில் ராக்ஷஸன் வசிப்பதாகவும், மனிதர்களைப் பார்த்தாலே கொன்று விடுவதாகவும் ஏற்கெனவே கேள்விப்பட்டு இருப்பதால் இன்னும் திகில் பிடித்துக் கொண்டது. ஒருவாறு இளவரசிகளை, "அதிக வெய்யில் ஏறிவிட்டதால் இங்கு தங்குவது சரி இல்லை" என்று சொல்லி அவர்களுடன் அரண்மனைக்குத் திரும்பினான். குருவைக் காணாத சிஷ்யர்களின் முகம் கவலையுடன் வாடி இருந்தது.

திரும்பி வரும்பொழுது வழியில் சிரித்த முகத்துடன் குரு குதிரையுடன் நின்று இருப்பதைப் பார்த்த இளவரசிகள் ஆநந்தத்துடன், "குருதேவா! இங்கே எப்படி வந்தீர்கள்? நாங்கள் அலைகிறோமே" என்று குதிரையின்மேலிருந்து துள்ளிக் குதித்து ஓடிவந்தார்கள்.

குருதேவர் நிதானமாய், "என் செல்வங்களே! நீங்கள் ஒவ்வொருவரும் எப்படி அழகாக குதிரையை அடக்கி சாமர்த்யமாய் ஓட்டுகிறீர்கள் என்று பார்ப்பதற்காக வேகமாய்வந்து சட்டென்று இந்தத் தோப்பில் நுழைந்து விட்டேன். நீங்கள் மூவரும் குதிரைமேல் கம்பீரமாய் சவாரி செய்யும் அழகைப் பார்த்து நானே ப்ரமித்துவிட்டேன். யாரை எப்படிக் கொண்டாடுவது என்றே தெரியவில்லை. உங்களுக்குச் சில ரஹஸ்ய வித்தைகளைச் சொல்லிக் கொடுத்து விடுவது என்று தீர்மானித்து விட்டேன்" என்று ஆர்வம் பொங்கக் கூறி, சிஷ்யர்களை மனஸ்பூர்த்தியாய் ஆசீர்வதித்தார். பிறகு குதிரைகளின் மேல் ஏறி அரண்மனைக்குக் கிளம்பினார்கள்.

மறுநாள் மாலை சந்திரா, இந்திரா பூந்தோட்டத்தில் விளையாடிக்கொண்டு இருந்தார்கள். குரு குமாரன் சாருகேசன் பரபரப்புடன் வந்து, "இளவரசிகளே! நாளைக்கு என் தந்தை நமக்கு ஒரு அற்புதமான வில்வித்தையைச் சொல்லிக்கொடுக்கப் போகிறார்" என்று குதூகலத்துடன் சொல்லி, இளவரசிகளையே கண்கொட்டாது பார்த்தான். அவன் பார்வையில் அன்பு ததும்பி நின்றது. அந்த அன்புப்பார்வையைக்கண்ட இளவரசிகளின் உள்ளங்களில் உணர்ச்சியைக் கிளப்பியது. நாணத்தால் முகம் சிவக்க தலையைக் குனிந்துகொண்டு பூதேவியைப் பார்த்துக்கொண்டு மௌனமாய் நின்றார்கள். மூவரிடையே மௌனம் சூழ்ந்துகொண்டது.

இவர்கள் மௌனத்தைக் கலைக்க வந்ததுபோல் ஒரு கிளி கீச் கீச் என்று தன் இனிய த்வனியைக் கிளப்பிக்கொண்டு இவர்கள் மத்தியில் புகுந்து பறந்து சென்று எதிர் மரத்தின்மேல் உட்கார்ந்து இன்னும் அதிகமாகக் கத்தத் தொடங்கியது. இந்திரா, சந்திரா எவ்வளவோ கிளிகளைப் பார்த்து இருக்கிறார்கள். ஆனால் அந்தக் கிளியைப்போல் தனி அழகு வாய்ந்த கிளி பார்த்ததே இல்லை.

மரத்தின்மேல் இருந்த கிளி சட்டென்று பறந்து வந்து இந்திராவின் தோளில் உட்கார்ந்துகொண்டது. இந்திரா ஆச்சர்யத்துடன் கிளியைப் பிடிக்கக் கையை எடுத்தாள். அதற்குள் கிளி மறுபடியும் இளையைத் தாவிப் பறந்தது. சாருகேசன் கிளியின் எழிலைப்பார்த்து மயங்கி அதை எப்படியாவது பிடித்து விடுவதே சரி என்று பிடிக்க ஓடினன்.

கிளி என்ன அவ்வளவு ஏமாந்த சோணகிரியா? சாருகேசனைச் சுற்றிச்சுற்றி அலைய வைத்து ஓய்ந்துபோகும்படிச் செய்து விட்டது. விடாகண்டனை சாருகேசன் சளைக்காமல் கிளியைத் துரத்தித் துரத்திக் கடைசியில் பிடிக்கவே பிடித்தான்.

என்ன மாயம்! கையில் அகப்பட்ட கிளி கொடிப்பொழுதில் மாயமாய் மறைந்து விட்டது. மறைந்த கிளி எங்கும் காணாது திகைத்து நின்ருன். அதே சமயம் இந்திரா, சந்திராவின் குரல்கள் ஏககாலத்தில் ஐயோ என்று அலறும் சப்தம் கேட்டது. சாருகேசன் ஒரே பாய்ச்சலாய் அவர்கள் இருந்த இடத்திற்கு ஓடி வந்தான். ஆனல் அவர்கள் இருந்த இடம் சூன்யமாய் இருந்தது. சாருகேசன் தலைமுதல் கால்வரை நடுங்தத் தலையைப் பிடித்துக் கொண்டு அப்படியே உட்கார்ந்துவிட்டான். அவன் கண்ணுக்கு உலகமே சுற்றுவதுபோல் இருந்தது. (தொடரும்)

---

# பாட்டி சொன்ன பழங்கதை 2.

சிறுவன் வை. மு. வெங்கடநரசிம்மன்.

ஒரு ஊரில் ஓர் அம்மா அப்பா இருந்தார்கள். அவர்களுக்கு ஒரு பெண் இருந்தாள். அப்பெண்ணுக்குக் கல்யாண வயது ஆகிவிட்டது. ஆதலால், அவர்கள் M. A. படித்த பிள்ளை வேண்டுமென்று, பேப்பரில் விளம்பரம் செய்தார்கள்.

பிறகு, பலர் வந்தனர். பிள்ளை அழகாக இல்லைஎன்று சொல்லி அனுப்பி விட்டனர். பிறகு, இதைக் கேட்ட ஒரு புலி மனித ரூபத்தில், அழகியவனுய் வந்தது. அதற்கு இப்பெண்ணின் தாய் தந்தையா கல்யாணம் செய்து கொடுத்தனர்.

உடனே புலி, "நான் ஊருக்கு இவளை அழைத்துச் செல்கிறேன்" என்றது. "சரி" என்று எல்லோரும் சொல்லி வழியனுப்பினர். பிறகு அழைத்துச் சென்றது.

பாதிவழியில் "நான் புலி. அதிகம் மீறினல் சாப்பிட்டு விடுவேன்" என்று பயமுறுத்தியது. சுய ரூபத்தையும் ஒருமுறை காட்டி மறுபடியும் மனிதனுயிற்று. அன்று இரவு தூங்கும்போது பெண், வீட்டிற்கு எப்படியோ வந்து விட்டாள்.

பிறகு ஆழமாய் ஒரு பள்ளம் தோண்டினர். ஒரு ஜமக்காளம் விரித்து அதன்மேல் தளுக்காக மூடி வைத்தனர்.

மறுநாள் புலி மனித வேடத்தில் வந்து, உங்கள் பெண்ணைக் காணவில்லை என்றது. உடனே, "உட்காருங்கள்! விவரமாய்ச் சொல்லுங்கள்" என்று, பள்ளத்தின்மேல் தளுக்காய் மூடிவைத்திருந்த இடத்தைக் காட்டினர்.

உடனே புலி ஜமக்காளத்தின் மீது உட்கார்ந்தது. பிறகு உள்ளே விழுந்துவிட்டது. பின்பு மண்ணைவாரிப் போட்டு மூடிவிட்டனர்.

# புனித யாத்திரையும்

## பூஜ்யரின் தரிசனமும்

தைப்புஷ்யம் வரப்போகிறது என்பதை நினைக்கும்போது, மார்கழி மாதம் முதலே மனத்தில் குதூகலமும் உத்ஸாகத்துடன் பரபரப்பும் உண்டாகி விடுகிறது! காரணம், தைப் புஷ்யத்தன்று நீர்வளூர் க்ராமத்தில் வருஷாவருஷம் நடக்கும் ஸ்ரீ லக்ஷ்மீநாராயணனின் உத்ஸவ சாத்துமுறை இசை கைங்கர்யத்தின் சிறப்பேயாகும். இவ்வருஷம் சென்ற ஆண்டுகளைக் காட்டிலும் மேலும் விசேஷமான இரண்டு மூன்று சம்ப்ரோக்ஷண வைபவங்கள் கூடச் சேர்ந்து விட்டதால் பின்னும் ப்ரம்மானந்தமாக இருந்தது.

கோயில் விமானத்தின் கலசத்தை எந்தப் படுபாவியோ சென்ற வருஷம் திருடிக்கொண்டு போய் விட்டானும். அந்த விமான கலசத்தைப் புதிதாகச் செய்து ப்ரதிஷ்டை செய்தார்கள். தவிர, ஸ்ரீ சடகோபம் புதிதாகச் செய்ததும், ஸ்ரீ ஆதிவண் சடகோப ஸ்வாமியின் விக்ரகப்ரதிஷ்டையும் சேர்ந்ததால் யாக யஜ்ஞத்துடன் உத்ஸவம் விசேஷமாக நடந்தது.

வழக்கப்படி ஞாயிற்றுக்கிழமை அதிகாலையில் சுமார் 20 பெண்மணிகளுக்குமேல் அடங்கிய ஒரு கோஷ்டி கிளம்பிச் சென்ற குதூகலத்தை அனுபவித்தவர்களுக்குத் தெரியுமேயன்றி எழுதி முடியாது. சுமார் 10 மணிக்குள்ளாகவே க்ராமத்தை யடைந்து விட்டோம். பெரிய கல்யாணங்களில் பிள்ளை விட்டாரைவரவேற்று நடத்தும் அன்பைக் காட்டிலும் ஆயிரம் மடங்கு அன்பும், மரியாதையும், மதிப்புங்கொண்டு அந்த ஊர்வாஸிகள் ஆடவர், பெண்டிர் உள்பட வரவேற்று உபசரித்த அழகை மற்றவர்கள் கற்றுக்கொள்ள வேண்டும். நாங்கள் சென்ற சமயமும் கலசத்தை கோபுரத்திற்குமேல் ப்ரதிஷ்டை செய்யும் சந்தர்ப்பமும் ஒன்றாக இருந்தது!

முதலில் ப்ரதிஷ்டை வைபவத்தை ஸேவித்துக் கொண்டு தயாராகக் காத்திருந்த காபி, உப்புமா இரண்டையும் கவனித்துவிட்டு ஏரிக்குச் சென்று சிலர் நீராடி வந்தனர். அன்று பௌர்ணமியாகையால் சென்ற கோஷ்டியினரில் சிலர் ஸத்ய நாராயண பூஜை செய்யும் வழக்கமுடையவர்கள் நாங்கள் இறங்கியிருந்த வீட்டில் அந்த பூஜையை மேளதாளத்துடன் வெகு ஆனந்தமாகக் கொண்டாடினார்கள். அந்த ப்ரஸாதம் வேறு கிடைத்தது. அடுத்தபடியாக கோயிலிலிருந்து சர்க்கரைப் பொங்கல் வந்தது. வயிறுதான் இல்லை! ஸ்வாமியின் வீதி புறப்பாடு வெகு நன்றாக நடந்தது. பிறகு திருமஞ்சனம் ஆயிற்று. அதன்பிறகு கோயிலிலேயே சாப்பாடு நடந்தது மிகவும்வேடிக்கையாயும் ஆனந்தமாயுமிருந்தது.

திரும்பவும் இடைவேளைக் காப்பி. அதன் பிறகு சாயங்காலம் கோயிலில் ஸ்ரீமதி A. ராஜம்மாள், ஸ்ரீமகாலக்ஷ்மியின் ப்ரபாவம் என்கிற அத்புதமான விஷயத்தை வெகு நன்றாக உபன்யாஸம் செய்தார். அதன்பிறகு பஜனை கோஷ்டி கானம் முதலியன

வழக்கப்படி இரவு 8–30 மணி வரையில் நடந்தது. அதற்குமேல் ஸ்வாமிக்கு அலங்காரமாகி, திருப்பாவை சாத்துமுறை நடந்தது. கதம்பமும் சக்கரைப் பொங்கலும் வாரிவழங்கினார்கள். கோயில் ப்ராகாரத்தில் நிலாவில்உட்கார்ந்துவனபோஜனம்போல்சாப்பிட்ட ஆனந்தத்திற்கு முன்பு நாகரீகமாக பிக்னிக் பார்ட்டி என்று நடத்துகிறதே அது நிற்க முடியுமா?

அதன்பிறகு வாணவேடிக்கைகளுடன் ஸ்வாமி வீதிப் புறப்பாடு ஆகியதும் டோலஉத்ஸவம் நடந்தது. சங்கத்து இசை கோஷ்டியினர் இரவு 2 மணிவரை பாடிய பிறகு சாற்றுமுறை உத்ஸவம் நடந்தது. விடியற்காலை 5 மணிக்குத் தீர்த்தப் ப்ரஸாதங்கள் பெற்றுக்கொண்டு என்னப்பன் லக்ஷ்மீநாராயணனை ஏகாந்தமாகத் தரிசித்த ஆனந்தத்தைச் சொல்லி முடியாது.

சங்கத்து இசைகோஷ்டியினரின் வீட்டு ஆடவர்களும் சிலர் வந்து கலந்துகொண்டார்கள். வழியில் அவர்கள் ஸ்ரீபெரும்பூதூரில் இறங்கி ஆசாரியனை ஸேவித்துவிட்டுப் பின் நீர்வளூர் வருவதற்குக் காத்திருந்தும் பஸ் கிடைக்கவே இல்லையாம். ஏகனாபுரம் பஸ்ஸில் சுங்குவார் சத்திரம் வந்து சேர்ந்தார்களாம். அங்கு விசாரித்ததில் இனி பஸ்ஸே போகாது நேரமாகி விட்டது என்று கூறிவிட்டார்களாம். என்ன செய்வார்கள் பாவம்! நடந்து போவதற்கோ சுமார் 7 மைலுக்கு மேலிருக்கிறது. நடக்கவும் ஸாத்யமில்லை. திரும்பிச் சென்னைக்குத்தான் போய்விட வேண்டுமோ? என்ற தயக்கமும் உண்டாகி விட்டதாம். 'எப்படியாவது நடந்துபோய் இரவு சேர்ந்து விடலாம். பகவான் துணையுடன் சக்தியைக் கொடுக்கட்டும். சென்ற வருஷம் இதே நீர்வளூரில் கெட்டுப்போன மூட்டையைக் காப்பாற்றிக் கொடுத்த லக்ஷ்மீநாராயணன் சக்தியைக் கொடுக்காமலாபோவார். நடையைத் தட்டிவிடுங்கள்' என்று தமக்குத்தாமே சொல்லிக் கொண்டு இளம்பினார்களாம். அந்தக் கோஷ்டியில் 66 வயதுக் கிழவர் வேறு தள்ளாத நிலைமையில் பக்தியும் ஆசையும் தூண்டவருகிறார்.

உத்ஸாகம் கிளம்பி விட்டால் சோர்வுக்கு இடமில்லையல்லவா! அவ்வளவுதான் குஷியுடன் நால்வரும் பஜனை செய்தவாறு நடக்கத் தொடங்கினார்களாம். நாம ப்ரபாவத்தின் மகிமை சும்மா விடுமா? அதன் ஆச்சரியமான சக்தியை அறியாமலா "குலந்தரும் செல்வம் தந்திடும்..." என்று ஆழ்வாரும், "நின்யாகே! நின்ஹங்க்யாகே நின்னநாமபலவே ஒந்துசாகே" என்று புரந்தரதாஸரும் பாடினார்கள். நெருப்பைத் தெரிந்து தொட்டாலும் சுடுகின்றது; தெரியாமல் தொட்டாலும் சுடுகின்றது; அதுபோல் அவன் நாமத்தை நம்பியும் வழிச்ரமத்திற்கு பரிகாரமாயும் பஜனைசெய்து பாடிக்கொண்டே சுமார் ஒரு மைல் தூரங்கூட நடக்கவில்லையாம்.

நாலைந்து தினங்களாக நின்றுப்போய் வராதிருந்த ஒரு பஸ்—அந்த வழியாகப் போகக்கூடிய பஸ்—பின்னால் "வந்தேன்! வந்தேன்! வந்துவிட்டேன்! நில்லுங்கள் நாமப்ரபாவத்தின் பலனைக் கண்டு கொள்ளுங்கள்!" என்று கட்டியம் கூறுவதுபோல் தனது தனிபாவையாகிய பம்பம் என்கிற இரைச்சலுடன்

வந்ததைக் கண்ட அந்த நால்வரும் உண்மையில் பூரித்துப் ப்ரமித்துப் போய்விட்டார்களாம். சென்ற வருஷம் மூட்டையைக் காத்துக்கொடுத்த விஷயம் பொய்யே யல்ல. பகவானின் சக்தி தான் நிச்சயமாயிருக்கிறது. நீர்வளூர் லக்ஷ்மீ நாராயணப் பெருமாள் மகாசக்தி உடைய பக்தவத்ஸலன் என்பதில் ஐயமில்லை! என்று அவர்களே வாயாரப் புகழ்ந்தவாறு நாங்கள் பஜனைசெய்து பாடும் சமயத்திற்குச் சரியாகவந்து கலந்து கொண்டார்கள். உத்ஸவம் வெகு நன்றாக நடந்தபிறகு மறுதினம் காலையில் நான்கு பெண்மணிகள் மட்டும் மதராஸ் திரும்பிச் சென்று விட்டார்கள்.

மற்றய எல்லோரும் காஞ்சீபுரம் பஸ்ஸுக்காகக் காத்திருந்து கிடைத்த ஒரு பஸ்ஸில் அத்தனை பேரும் நின்றபடியே பிடியைப் பிடித்துத் தொங்கிக்கொண்டே "ஆடுவோமே! பஸ்ஸில் ஆடுவோமே ஆனந்த தரிசனம் அடைந்திட்ட பெருமையில்" என்று பாடிக்கொண்டே காஞ்சீபுரம் வந்து சேர்ந்தோம்.

மகான் அண்ணங்கராசாரியருடைய ஒப்புயர்வற்ற கைங்கர்ய மான நம்பிள்ளை ஸன்னிதியில் இறங்கினோம். கோயிலில் அன்று பெருந்தேவித் தாயாருக்கும் வரதாராஜருக்கும் தெப்ப உத்ஸவம். இருவருக்கும் சேர்ந்தாற்போல திருமஞ்சன சேவை அத்புதமாக நடந்தது, ஸேவித்தோம். நம்பிள்ளை சன்னிதியில் சாப்பாடு முடிந்ததும் காமகோடிபீடம் சங்கராசார்ய ஸ்வாமிகளை தரிசிக்கச் சென்றோம். அப்போது மணி 3 இருக்கும். ப்ரம்மானந்தமான பூஜை, தீபாரத்தி முதலியன நடந்த வைபவத்தை சேவித்து ஸ்ரீஸ்வாமிகளையும் தரிசித்து நமஸ்கரித்து அனுக்ரகம் பெற்றோம். பிறகு அண்ணங்கராசார்ய ஸ்வாமி திருமாளிகைக்குச் சென்று அவரை தரிசித்து ஆசிபெற்றுப் பின் மீண்டும் இடைவேளை போஜனத்திற்குப் பிறகு சங்கராசார்ய ஸ்வாமிகள் மடத்திற்கே சென்றோம்.

அந்தி பூஜை நேரம்: அந்த பூஜையின் மங்களகரமான நிகரற்ற காட்சியை எல்லா பக்தர்களும் இதற்காகவே சென்று தரிசித்து இன்புற்று வரவேண்டுமேயன்றி வர்ணிக்கவே முடியாது. அத்தனை அத்புதம்! ஆனந்தம்!......என்றால் மிகை யாகாது.

அம்பாள் ஸன்னிதானத்தின் முன்பக்கமுள்ள ஒருமேடை மேல் ஸ்ரீ பாதுகைகளை எழுந்தருளப் பண்ணி, புஷ்பமாலைகள் சமர்ப்பித்தார்கள். அதன் இருபுறமும் இரண்டு ஸன்னதி தீவட்டிகள் பொருத்தப்பட்டிருந்தன, அதற்கும் முன்னால் பெரிய குத்துவிளக்கு லக்ஷ்மீகரத்தை அள்ளிவீசும் வண்ணம் பஞ்ச முகமும் ஜோதிமயமாய் ப்ரகாசித்துக்கொண்டிருந்தது. அதன் இருபக்கமும் மூங்கில் கழிகள் கட்டி வழி வகுத்திருந்தது.

எல்லோரும் ஆனந்தப் பூரிப்புடன் நிற்கையில் ஸ்ரீமகான் ஸ்வாமிகள் எழுந்தருளி கதவருகில் நின்றார் அந்த திவ்ய புருஷனின் முகத்தில்தான் என்ன தேஜஸ்ஸும் கண்களில் சாந்தமும் தாண்டவமாடின! ப்ரம்ம தேஜஸ் என்கிற உண்மைத் தோற்றத்தை ஒரு சிலரிடந்தான் ப்ரத்யக்ஷமாக நான் கண்டு பூரித்

இருக்கிறேன். அதில் இம்மககான் ஒருவராவர். நாங்கள் யதீந்திரரையும் தீபஜோதியையும் மாறிமாறித் தரிசிக்கும்போது சற்று விலகி நில்லுங்கள் விலகுங்கள் என்று சிலர் சொல்வதைக் கேட்டுத் திரும்பும்போது என்ன ஆச்சரியம்!.........நடுத்தடுத்தர உயரமுடைய ஒரே அளவான இரண்டு யானைகள் அந்த இடத்தில் வந்தது கண்டு ப்ரமித்தோம்!

வந்த யானைகள் இரண்டும் தம்தம் இடத்திற்கு வந்து நின்றன. அழகாக மண்டியிட்டு வணங்கி எழுந்த காட்சியைப் பார்க்கும்போது ஏதேதோ உதவாக்கரை விஷயங்களைப் படம் பிடித்துக் காட்டிப் பாழடிக்கும் படத்தொழிலாளிகள் சர்கஸில் பழகிய யானைகளைவிட அதிகமான பழக்கத்துடன் செய்யும் இந்த மடத்து யானைகள் செய்த காட்சியை அந்தி பூஜையைப் படமெடுத்து ஒவ்வொரு தியேட்டரிலும் காட்டி மக்களின் இதய பூமியில் தெய்வபக்தி, ஆசாரிய பக்தி இரண்டையும் வளர்க்கக் கூடாதா? என்றுதான் தோன்றியது. யானைகள் மண்டியிட்டு வணங்கி எழுந்ததும் தம் பாஷையில் பகவன்னமத்தைக் கூவி பஜிப்பதுபோல் மூன்று முறைகள் கூவியதும் பாதுகை வைத்துள்ள மேடைக்கு இருபுறமும் யானைகள் வந்து நின்று சாமரம் வீசிய காட்சியை வர்ணிக்கவே முடியாது.

அதன்பிறகு ஒருவர் சந்தவிருத்தம் போன்ற சந்தத்தில் ச்லோகத்தை ஒவ்வொரு அடியாக அவர் சொல்கிறார். அதற்குச் சரியாக டோலக் என்கிற தாளக்கருவியால் சரிமானபடி தாளத்தைத் தட்டுகிறார் மேளக்காரர். அதற்குச் சரியாக யானைகள் சாமரத்தை இரண்டு புறமும் போடும் அத்புதக் காட்சியைக் கண்டு அனுபவித்தால்தான் தெரியும்.

அச்சமயம் நாங்கள் பூலோகத்தில்தான் இருக்கிறோமா? அல்லது அம்பிகையின் ஸன்னிதான உலகத்திலேயே போய் விட்டோமா?...என்றுதான் தோன்றி மெய்மறக்கச் செய்தது. கஜலக்ஷ்மி திருக்கோலத்தைப் படத்தில் சித்திரக்காரர்களின் கைத்திறமையினால் வரைந்துள்ளதையும் அர்ச்சகர் தேவிக்கு கஜலக்ஷ்மி திருக்கோலம் சமர்ப்பிப்பதையும் ஸேவித்திருக்கிறோம். அன்று அங்கு பார்த்த அந்த மகத்தான காட்சி கஜலக்ஷ்மியின் திருவடிவத்தையே நேரில்கண்டு களிப்பதுபோல் பரவசமாகிக் கண்ணீர் வழிந்துவிடச் செய்தது. அந்த ச்லோகத்தை முடிக்கும் வரையில் சாமரம் போட்ட யானைகள் அந்த கைங்கர்யம் முடிந்ததும் மறுபடியும் மண்டியிட்டு ஸேவித்துக் கத்தித் தமது பக்தியைத் தெரிவித்துப் பின் பாகனுடன் கிளம்பிச் சென்றன. செல்லும் போது எல்லோரும் தேங்காய், பழம் எல்லாம் கொடுத்தார்கள். அவைகள் வாங்கிக்கொண்டு துதிக்கையால் ஸலாம் செய்வது போல் செய்துவிட்டுச் சென்ற காட்சி என்றும் என் அகக்கண் முன்பு அப்படியே இருக்கும். குங்கும ப்ரஸாதம் கிடைத்த பிறகு ஸ்ரீஸ்வாமிகளின் அருகில் சென்று தண்டன் ஸமர்ப்பித்தோம்.

ஏற்கெனவே ஸ்வாமிகளை தண்டன் சமர்ப்பித்து அறிமுகமான பக்தன் ஆசிரியர் M.O. அழகிய சிங்கராச்சாரி எங்கள் கோஷ்டியை

ஸ்வாமிக்கு அறிமுகப்படுத்தியதோடு எங்களுடைய மகாத்மாஜி ஸேவா சங்கத்தைப் பற்றியும் சொன்னார். இசைபாடவே வந்திருப்பதாக நீர்வளூர் விஷயத்தையும் சொன்னார்.

திருப்பாவையை அப்போதே அங்கு ஸன்னிதானத்தில் பாடும்படி ஸ்வாமியின் உத்திரவு பிறந்ததும் எம்முடைய பாக்யமென்று எண்ணி உடனே பாடத் தொடங்கினோம். திருப்பாவை 30 பாசுரம்; தவிர, வேறு உருப்படிகளான திருக்குறள், ப்ரபந்த கீர்த்தனை முதலியனவும் பாடினோம். ஸ்வாமி ஸன்னிதானத்தின் வாசற்படியிலே அமர்ந்திருந்தார்.

அன்று தெப்ப உத்ஸவமாகையால் ஸேவித்துவிட்டு வரும்படி கட்டளை பிறந்தது. உடனே தெப்ப உத்ஸவத்திற்குச் சென்றோம். எந்த திவ்யதேசத்திலும் இல்லாத புதுமை ஸ்ரீ தேவராஜப் பெருமாளுக்கும் பெருந்தேவித் தாயாருக்கும் நடந்த தெப்ப சேவையை ஆனந்தமாகக் குளக்கரைமேல் அமர்ந்து சேவித்தோம்.

மறுபடியும் மடத்திற்குச் சென்றோம். ஸ்ரீ ஸ்வாமிகளை தரிசித்துப் பின் சுமார் ஒன்றரை மணி நேரம் அந்த மகானிடம் எல்லோரும் வெகுவெகு முக்யமான விஷயங்களைப்பற்றி பேசியதோடு உபதேசங்களும் பெற்று இன்புற்றோம். இத்தகைய ஒரு மகாபாக்யம் எங்களுக்கு ஸ்ரீ லக்ஷ்மீ நாராயணனின் உத்ஸவ கைங்கர்யத்தினால்தான் கிடைத்தது என்று எங்கள் உள்ளங்கள் எண்ணிப் பூரித்தன. எங்கள் கோஷ்டியில் சேர்ந்துள்ள குமாரி ஜி. பி. கமலாவை ஸ்வாமிகள் மறுபடியும் பாடச் சொன்னார். ப்ரபந்தம், புரந்தரதாஸர் கீர்த்தனை தெலுங்குக் கீர்த்தனை முதலியன பாடினாள். ப்ரபந்தங்களை மெட்டுக்களமைத்து அழகிய உருவாக்கியுள்ள A. ராஜம்மாளும் பாடினார்கள். ஸ்வாமிகள் கையால் எங்களுக்கு குங்கும ப்ரஸாதமும் கமலாவுக்கு ஸ்வாமிகளின் அனுக்ரக ரக்ஷையைப் போன்ற தங்கக் காசும் அளித்து வாழ்த்தினார்கள். இரவு சுமார் 10 மணிக்கு விடைபெற்று நம்பிள்ளை ஸன்னிதிக்கு வந்து சேர்ந்தோம். சங்கம் பஜனை கோஷ்டியாகக் கிளம்பிச் சென்ற பாக்யத்தினால் எத்தனை நன்மைகள் கிடைத்தன! என்ற எண்ணம் எங்கள் இதயங்களில் அலைமோத மறுதினம் நம்பிள்ளை ஸந்நிதியில் காலை இசைவணக்கத்துடன் விடைபெற்று, சென்னையை வந்தடைந்தோம். இத்தகைய உல்லாஸ யாத்திரைக்கு நிகர் வேறு ஏதாவது இருக்க முடியுமா? நீங்களே சொல்லுங்கள். பிழைத்துக் கிடந்தால் அடுத்த வருஷம் நீர்வளூர் லக்ஷ்மீ நாராயணனை ஸேவிக்க யார்யார் வருகிறீர்களோ! இப்போது முதல் ஏற்பாடு செய்யுங்கள். —வை.மு.கோ.

---


# பக்தன்.

**தெய்வீக மாதப் பத்திரிகை.**

தனி ப்ரதி அணா 5.

வருடச் சந்தா ரூ. 3, நன்கொடைச் சந்தா ரூ.10

இசைப் பகுதி

பிலஹரி

[நப்பின்னைப் பிராட்டியின் கல்யாணமும்: தப்பினபிள்ளைகளை,

| | | | | | |
|---|---|---|---|---|---|
| , க | ப | , த | ஸ்ா ஸ்ா | ஸ நி | தப தா |
| . தி | ப்பு | . டை | யா . | ய ர் | கள் தம் |
| ; ரிக | பா | பா பா | தா பா | ம க | ரீ ரீ |
| . தூ | . . | ய க | ரு ங் | கு . | ழ ல் |
| ; கா | ரிஸ | ரீ கா | கா கா | ரி க | பா பா |
| . நப் | பி . | னை . | தல . | தி . | ற மா |
| ; கா | பா | பா தா | ஸ்ா ஸ்ா | ஸ நி | த ப தா |
| . நல் | ல | . தி | ற . | லு . | டை ய |
| , க | ப | ப த | ஸ் ஸ் | ஸ் | ஸ்ா நி த |
| . தப் | பி | . ன | பி ள் | ளை | க ளை . |
| ; தா | தா | ரீ ஸ்ா | ரீ ரீ | ரீ | ரீ ரீ |
| . த | னி | யொ ரு | தேர் | க | ட வித் |
| தா தா | தா | கா ரீ | ரீ ஸ்ா | ஸ் நி | த ப தா |
| என் அ | . . | ப் ப . | எனக் | கொ | ரு கால் |
| . கா | பா | ;பா தா | ஸ்ாஸ்ா | ஸ் நி | தபதா |
| ; ஆ | யர் | . கள் | போ . | பே . | . . றே |

மத்யமகால

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பாமக | ரீ | மகரிஸ | ரீரிரி | கா | கக பா |
| பாலொடு | நெய் | தயிரொண் | சாந்தொடு | சண் | பகமும் |
| காபத | ஸ்ா | ஸ்நிதா | தரிஸ்ஸ் | ஸ்நி | தபதா |
| கோலந | றும் | பவளச் | செந்துவர் | வா | யினிடைக் |
| தாகரி | ரீ | ரிரிரீ | ஸ்ரிகப | மக | ரிஸ்நித |
| நீலகி | றத் | தழகா | ரைம்படை | யின் | நடுவே |
| ததகரி | ரீ | ரிரிரீ | ஸ்நிதரி | ஸ்நி | தபதா |
| ஏ.லும | றைப் | பொருளே | ஆ.டுக | செங் | கீ.ரை |
| ரி★க | | | | | |
| வே★துப் | | | | | |

# திருமொழி

ஏ. ராஜம்மாள்

**தாளம்: கண்டசாபு**

தனியொரு தேர்கடவி, தாயோடு கூட்டிய தனிக்கதை யடங்கியது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஸ்ா ஸ்ா | ஸ் நி | தா பா | தா பா | ம க | ரி க ரீ ‖ |
| சொ ல் | . . | வ ழு | வா . | தொ | ரு . கால் ‖ |
| ரீ ரீ | ம க | க ரி ஸா | ஸநிதா | ஸா | ஸா ஸா ‖ |
| ந ல் | தோ | . . கை | ம . யி | ல | ளை ய ‖ |
| பா தா | பா | ம க ரீ | கா ஸா | ரீ | கா பா ‖ |
| நல் . | . | விடை | ஏ . | ழ | வி ய ‖ |
| ஸ்ா ஸ்ா | ஸ நி | தா பா | தா பா | ம க | ரி க ரீ ‖ |
| நா | . . | தனும் | ஆ . | ன , | வ . னே ‖ |
| , த | ரீ | ஸ் ஸ் | ஸ் ஸ் | ஸ் | ஸா நித ‖ |
| . த | ன | மி கு | சோ . | தி | பு க த் ‖ |
| ஸ் ரி க ப | ம க | ரீ ஸா | ஸா ஸா | ஸா | ஸ நிதா ‖ |
| தா . . | . . | யொடு | கூட் | டி | ய . . ‖ |
| ஸ்ா ஸ்ா | ஸ்நி | தா பா | தா பா | ம க | ரி க ரீ ‖ |
| ஆ . | . . | டு க | செங் | கி . | . . ரை ‖ |
| ஸ் நி த ரி | ஸ் நி | தா பா | தாபா | மக | ரி க ரீ ‖ |
| ஆ ... | . . | டு க | ஆ . | டு . | . . வே ‖ |

**ஸாஹித்யம்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கா ப த | ப த | நி ப த ப | நி த த ப | ம க | ரிக ஸ்ா ‖ |
| ப ங் க ய | ந ல் | ல க ருப் | பூ . ரமும் | நா | றி வர ‖ |
| த த ரி ஸ் | ரீ | ரி ரி ரீ | ஸரிகரி | ஸா | ஸநிதா ‖ |
| கோமள | வெள் | ளி மு ளை | ப்போல்சில | பல் | லி ல க ‖ |
| த த க ரி | ரீ | ம க ரி ஸ் | ஸ்ரிகரி | ஸா | ஸநிதா ‖ |
| நின்கனி | வா | ய மு த ம் | இற்றுமு | றிந் | து விழ ‖ |
| ஸ்நி தரி | ஸ் நி | தபதா | ஸா நித | பத | பா மக ‖ |
| ஏ . முல | கு ம் | முடையா | ய்ஆ.டு | க ஆ | . டு க ‖ |

# காளிதாசர் கனவு

## 8. உமா ப்ரஸாதம்—குமார ஸம்பவம்

[கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரி]

[சென்ற இதழ்த் தொடர்ச்சி]

காளிதாசர் மீண்டும் கூறிலானார்: "நான் பிறகு எழுதியது குமாரசம்பவம். அதை ஒரு மகா காவ்யமாக எழுதவேண்டும் என்று எனக்கு அளவற்ற ஆசை. பராசக்தியின் பெருமையையும் அருளையும்பற்றி அதில் மோகனமான முறையில் சித்தரிக்கவேண்டுமென்று என் எண்ணம். என் இதயராணி சந்திரகலை கர்ப்பமாக இருந்த காலத்தில் கலையின் உருவாகவும் வீரத்தின் அவதாரமாகவும் ஒரு குமாரன் பிறக்கவேண்டும் என்று எங்களிருவருக்கும் இருந்த வேட்கையை அந்தக் காவ்யம் குறிக்கின்றது. அதில் நான் இமய மலையில் கண்ட அற்புதங்களை யெல்லாம் உற்சாகத்துடன் வர்ணித்தேன். நான் இனப நுகர்ச்சியில் ஆழ்ந்திருந்து* காவ்யத்திறத்தை தேவியின் அருளால் பெற்று சொல்லழகில் ஈடுபட்டிருந்து அதை அமிர்த வர்ஷமாக வாரி இறைக்கும் யௌவனப்பருவத்தில் நான் எழுதிய காவ்யம் குமாரசம்பவம். அதன் சாரத்தை உனக்கு அறிவிக்கின்றேன்."

### பார்வதியின் ஜனனம்

மீண்டும் அவர் கூறினார்: "வடதிசையில் தெய்வத் தன்மை வாய்ந்த இமயமலை என்ற பெயருள்ள மலை கீழ் சமுத்திரம் மேல் சமுத்திரம் இரண்டையும் தொட்டு,பூமிக்கு ஒரு அளவு கோல் போல் விளங்குகின்றது. இந்த வர்ணனையில் என் கருத்து என்ன வென்றால் பாரதநாட்டின் பண்பாடு உலகத்தில் மிக உயர்ந்த தென்றும் அதை லக்ஷ்யமாக வைத்துக்கொண்டே ஏனைய நாடுகளின் நாகரீகங்களுடைய உயர்வு தாழ்வை நாம் தீர்மானம் செய்யவேண்டும். ஒபபுயர்வற்ற இமயமலையின் நிழலில் அன்புடன் வளர்க்கப்பட்ட நாகரீகம் ஆன்மீகப் பண்பாட்டின் உச்சிநிலையை அடைந்திருக்கின்றது. இமயமலை அனேக இரத்தினங்களுக்குப் பிறப்பிடமாதலால் அதற்குப் பனி ஒரு குறைவாக இல்லை. சந்திரனுடைய கிரணங்களில் மாசு மறைந்துபோவது போல் அனேக குணங்களில் ஒரு குறைவு மறைந்துபோய்விடும்.

அனந்த ரத்னப்ரபவஸ்ய யஸ்ய
ஹிமம் ந சௌபாக்ய விலோபிஜாதம் |
ஏகோஹிதோஷோ குணஸந்நிபாதே
நிமஜ்ஜ தீந்தோ: கிரணேஷ்விவாங்க: ||

மேகங்கள் அதன் கடு வரையில் தான் சென்று கொண்டிருக்கும்; அதன் உச்சிகள் மேகமண்டலத்திற்கும் உயர விளங்கும். அதில் இன்ப மயமான ஒலிகளும் மனதைக் கவரும் நறுமணங்களும் நிரம்பி இருக்கும். அது கதிரவன் கிரணங்களிடம் பயந்த இருட்

* இவ்விதழின் மேலட்டையில்: காளிதாஸர் — சந்த்ரகலை: தெய்வீகக் காதல்.

டுக்கும் இடமளிக்கும் குகைகளுடன் கூடியிருக்கின்றது. பலமற்ற வன் சரண்புகுந்தால் அவனைக் காப்பதில் நல்லவனைக் காப்பதில் எவ்வளவு உற்சாகமோ அவ்வளவு உற்சாகம் பெரியோர்களுக்கு உண்டு.

க்ஷுத்ரேபி நானம் சாணம் ப்ரபன்னே
மமத்வமுச்சை: சிரஸாம்ஸதீவ ||

அது இரவில் ஒளிவீசும் ஓஷதிக்கொடிகளால் பிரகாசிக்கும். கங்கையின் நீரால் குளிர்ச்சியடைந்து தேவதாரு மலர்களால் நறுமணம் பெற்று மெதுவாக வீசுங்காற்று இன்பத்தைக் கொடுக்கும். மலைகளுக்கெல்லாம் இமயமலையே அரசன்.

அந்த இமயமலையின் தெய்வமான ஹிமவான் மேனை என்ற தெய்வப் பெண்ணை மணந்தார். அவர்களுக்கு முதல் மகவாகப் பிறந்தது மைனுகம் என்ற பர்வத ராஜன். இரண்டாவது குழந்தை பார்வதி தேவி. சதிதேவியே பார்வதி தேவியாக அவதாரம் செய்தாள். அப்பொழுது தேவலோகத்திலிருந்து பூ மாரி பொழிந்தது. தேவதுந்துபிகள் முழங்கின, கந்தர்வர்கள் கானஞ் செய்தார்கள். அப்சரப் பெண்கள் நாட்டியம் ஆடினார்கள். எல்லாப் பிராணிகளும் இன்பம் எய்தின. அந்தக் குழந்தை நாளொரு மேனியும் பொழுதொருவண்ணமுமாக வளர்பிறைபோல் பிரகாசித்தாள்.

தீபம் சுடரின் ஒளியால் எப்படி விளங்குமோ, சுவர்க்கம் ஆகாச கங்கையால் எப்படி மேன்மை அடையுமோ அறிஞன் சரஸ்வதி அருளால் கிடைத்த சொல்லழகால் எப்படிப் பிரகாசிப்பனோ அப்படி ஹிமவான் பார்வதிதேவியின் பிறப்பால் தூய்மையையும் ஒளியையும் அழகையும் பெற்றார். அவளுக்குக்கல்வியைக் கற்பித்தபொழுது இயற்கையாகவே அவளுடைய முற்பிறப்பில் பிரகாசித்த வித்தைகள், மழை நாளில் அன்னங்கள் கங்கையை எப்படித் தேடியடையுமோ, ஒளிவீசுங் கொடிகளின் ஒளி எப்படி பகலில் மறைந்திருந்து இரவில் ஓஷதிச்செடிகளைச் சேருமோ, அப்படி அவளை அடைந்தன. சரஸ்வதியை வென்ற ஞானத்துடன் அவள் விளங்கினாள்.

ப்ரபாமஹத்யாசிகயேவ தீப:
த்ரிமார்கயேவ த்ரிதிவஸ்ய மார்க:
ஸம்ஸ்காரவத்யேவ கிராமனீஷீ
தயாஸபூதஸ்ச விபூஷிததஸ்ச: ||
தாம் ஹம்ஸமாலா: சாதீவகங்காம்
மஹௌஷதிம் நக்தமி வாத்மபாஸ: |
ஸ்த்திரோபதேசாமுபதேசகாலே
ப்ரபேதிரேப்ராக்தன ஜன்மவித்யா: ||

உடலின் எழிலை வளர்க்கும் இயற்கை தேவி தானே அளித்த அணியாகவும், மனதை மயக்கும் மத்யமாகவும், மன்மதனுடைய மலரல்லாத ஆயுதமாகவும் உள்ள யௌவனப் பருவத்தைப் பார்வதி அடைந்தாள். அழகாக எழுதப்பட்ட ஓவியம்போலவும்

கதிரவன் கிரணங்களால் புதிதாக மலர்ந்த தாமரைப் பூவைப் போலவும் அவள் விளங்கினாள்.

அஸம்ப்ருதம் மண்டனமங்கயஷ்டே
ரனாஸ்வாக்யம் கரணம் மதஸ்ய |
காமஸ்ய புஷ்பவ்யதிரிக்தமஸ்த்ரம்
பால்யாத்பரம்ஸா தவய: ப்ரபேதே ||
உன் மீலிதம் தூலிகயேவ சித்ரம்
ஸூர்யாம்சுபிர் பின்னமிவாரவிந்தம் |
பபூவதஸ்யாஸ்சதுரஸ்ரசோபி
வபுர்விபக்தம் நவயௌவனேன ||

அவள் நடக்கும்பொழுது அவளுடைய அடிகள் நிலத்தாமரைகள் போல் பிரகாசித்தன. அன்ன நடையுள்ளவள். சிறந்த எழிலுள்ளவள். மிருதுவான சிரிஷமலர் போன்ற கைகளையுடையவள். ஆபரணங்களுக்கே அழகு நிறைந்த அணியாக விளங்கும் தேக சௌந்தரியம் வாய்ந்தவள். சந்திரனுடைய ஒளியும் தாமரையின் மணமும் ஒருங்கே கூடிய வதனமுள்ளவள். முத்துக்களைப் போன்ற பற்களை உடையவள். பவளம்போன்ற உதடுகளை உடையவள். குயிலைப்பழிக்கும் குரலுடையவள். பெண் மானைப் பழித்த கண்களையுடையவள். மன்மதனுடைய வில்லை வென்ற புருவமுடையவள். அழகிய கூந்தலுள்ளவள். அவளுக்கு நிகராகச் சொல்லக்கூடிய பெண் எப்பொழுதும் எவ்விடத்திலும் இல்லை.

(தொடரும்.)

---

# ஆன்ம தத்துவம் (ஆன்மாவின் இயல்பு)

பண்டிதை S. கிருஷ்ணவேணியம்மாள்,
முன்னைத்தலைமைத் தமிழ் ஆசிரியை,
சென்னை லேடிவில்லிங்டன் உயர்தரக் கலாசாலை.

❊

[சென்ற இதழ்த் தொடர்ச்சி]

அவ: இங்ஙனம் ஆன்ம சொரூபம் சுகரூபமாயிருக்கும் என்பதை, தூங்கி உணர்ந்தவன் வார்த்தையைக்கொண்டு காட்டுகிறார்:

மூலம்: 10. உணர்ந்தவன் ஸுகமாக உறங்கினேன் என்கையாலே ஸுகரூபமாகக் கடவது.

பொருள்: தூங்கி விழித்தவன், "யான் ஸுகமாகத் தூங்கினேன்," என இயம்புகின்றமையின், ஆன்மா சுகரூபமாயுள்ளது எனக் கொள்க.

விளக்கம்: ஆன்மாவிற்கு, தனக்குத்தானே சுகமாகத் தோன்றிக் கொண்டிருக்கும் தன்மை எப்போதும் உண்டு என்னலாம். ஆயினும் விழிப்பு நிலையில், வெளிவிஷயங்களின் தோற்றம் உள்ளமையின, அவ்வான்ம அனுபவம் இருந்தும் இல்லாதது போன்றுள்ளது. புலன்கள் செயலற்று உறங்கும் (சுழுத்தி) நிலையில் வேறு பொருள்களின் தொடர்பு இல்லாமையின், அவ்வான்ம

அனுபவம் நன்கு வெளிப்படுகிறது. அந்நிலையில் அனுபவிக்கும் சுகம் ஆன்மாவாகத்தானே இருக்க வேண்டும். ஆதலின், சுகமாயிருக்கை ஆன்மாவிற்குச் சொரூபம் என அறிகின்றோம்.

அவ: இனி, ஆன்மா எக்காலத்திலும் உண்டு என்பதைப் பகருகிறார்:

மூலம்: **11.** நித்யமாகையாவது—எப்போதுமுண்டாகை.

பொருள்: ஆன்மா முக்காலத்திலும் உளதாதலின், அதை எப்போதும் உண்டாயிருத்தல் என அருளிச் செய்கிறார்.

அவ: இதற்கு விரோதங்களாயுள்ள சில ஐயங்களைப் பிறப்பித்துக்கொண்டு அவற்றைப் போக்குகிறார்:

மூலம்: **12.** எப்போதுமுண்டாகில், ஜந்மமரணங்களுண்டாகிறபடியென்? என்னில்; ஜந்மமாவது-தேஹ ஸம்பந்தம், மரணமாவது - தேஹவியோகம்.

விளக்கம்: இதற்கு சிறிது விளக்கமாகவே பொருள் கூற வேண்டியுள்ளது. ஆன்மா எக்காலத்திலும் நிலைத்திருக்கும் பொருள் என இயம்பின்; "மக்கள் நான்முகனால் உண்டாக்கப்பட்டார்கள்; எல்லா உயிர்களும் எம்பெருமானைக் காரணமாக உடையன; இவ்வுலகங்கள் யாவும் தோற்றக்காலத்தில் உண்டாகின்றன; ஊழிக்காலத்தில் அழிகின்றன" என்னும் வேத வாக்கியங்கள் ஆன்மாவிற்குத் தோற்றம் மறைவுகள் உண்டு எனத் தெரிவிக்கின்றனவே, இவற்றின் கருத்து யாது? என்னில், பிறப்பாவது உடலின்தொடர்புற்றிருத்தலும், இறப்பாவது உடலின் தொடர்பற்றிருத்தலுமேயாகும்.

வினா: ஆன்மா நித்தியனாகில், 'சிருஷ்டிக்கு முன்பு பகவான் ஒருவனே இருந்தான்', என்பது எவ்வாறு பொருந்தும்?

விடை: பிரளயகாலத்தில், பிரகிருதி, சீவன், பகவான் ஆகிய முப்பொருள்களும் உள்ளன. ஆயினும், அவ்வமயம் மற்ற இரண்டும் பகவானிடத்தில் பெயரும் உருவமும் அற்று நுட்பமாக ஒன்று என்று சொல்லும் நிலையில் அடங்கியிருக்கின்றமையின், அக்கால் பகவான் ஒருவன் என்று சொல்லப்படுகிறான். இங்குச் சொல்லும் ஒன்று (ஏகம்) என்பதற்கு, பெயர் உருவங்கள் அற்ற தன்மை என்பது பொருள்.

அவ: மேற்கூறிய இலக்கணங்களையுடைய 'ஆன்மா' அணு என அறிதல் யாங்ஙனம்? என்னும் வினாவைக் கிளப்புகிறார்:

மூலம்: **13.** அணுவானபடி என்? என்னில்;

அவ: இதற்கு விடை அருளிச்செய்கிறார்:

மூலம்: **14.** ஹ்ருதய ப்ரதேசத்தில் நின்றும் உத்க்ரமித்துப் போவது வருவதாமென்று சாஸ்த்ரம் சொல்லுகையாலே, ஆத்மா அணுவாகக் கடவது.

பொருள்: "ஆன்மா, இருதயத்திலிருந்து வெளியேறுதல் வருதல் ஆகியவற்றை உடைத்தாயிருக்கின்றது." எனச் சாத்

திரம் சொல்லுகின்றமையின்; அஃது அணுவாகத்தான் இருத்தல் வேண்டும்.

விளக்கம்: அணு விபு என்பன ஒன்றிற்கொன்று மாறான பொருளைத்தருவன. விபுவாயிருப்பின், பகவானைப்போன்று எங்கும் பரவியிருக்க வேண்டுமேயன்றி, போக்குவரத்து செய்தற்கு யாங்ஙனம் இயலும்? எப்போது சலனத்தைப் பெற்றுள்ளதோ அப்போதே அஃது அணுவாகத்தானிருக்க வேண்டும். இன்றேல், ஒருடலிலிருந்து வெளிப்படுதல், மற்றோருடலில் புகுதல் ஆகிய காரியங்கள் நடைபெற இயலா. ஆதலின், ஆன்மா அணுத் தன்மை வாய்ந்தது எனக்கொள்ள வேண்டியுள்ளது.

அவ: ஆன்மா அணுவ்வாக ஓரிடத்திலேயே அமையுமாயின், வெவ்வேறு உடற்கூறுகளில் உண்டாகும் இன்பதுன்பங்களைத் துய்த்தல் யாங்ஙனம் என்னும் ஐயத்தை வருவித்துக்கொள்ளுகிறார்:

மூலம்: 15. அணுவாய், ஹ்ருதயத்தளவிலே நிற்குமாகில் சரீரம் எங்குமொக்க ஸுதுக்கங்களைப் புஜிக்கிறபடி என்? என்னில்;

பொருள்: சாத்திரம் சொல்லுகிறபடி, ஆன்மா இருதயப் பிரதேசத்தில் மட்டும் நிலைபெற்றிருப்பதாயின், "எனக்குக் காலில் வலி உண்டாய்த் துன்புறுத்துகிறது; தலையில் வலியின்றிச் சுகமாயுள்ளது" எனக் கால்முதல் தலைவரையும் ஏற்படும் இன்ப துன்பங்களை ஒரே நிலையில் உணருதல் யாங்ஙனம்? என வினவில்,

அவ: அதற்கு விடை பகருகிறார்:

மூலம்: 16. மணித்யுமணி தீபாதிகள் ஓரிடத்திலே இருக்க, ப்ரபை எங்குமொக்க வ்யாபிக்குமாபோலே, ஜ்ஞாநம் எங்கு மொக்க வ்யாபிக்கையாலே அவற்றைப் புஜிக்கத் தட்டில்லை,

பொருள்: இரத்தினம், சூரியன், விளக்கு முதலிய ஒளி வாய்ந்த பொருள்கள் ஓரிடத்திலிருப்பினும், அதனுடைய ஒளி சுற்றுப்புறமெங்கும் வீசுதல்போன்று, அணுவளவாகிய ஆன்மா இருதயத்தை இடமாகக்கொண்டிருப்பினும், அதன் ஞான ஒளி உடல் எங்கும் ஒரேதன்மைத்தாகப் பரவி இருத்தலின், எல்லா இடங்களிலும் இன்பதுன்பங்களைத் துய்க்கத் தடையில்லை.

அவ: "மனிதனுடைய இருதயகமலத்திலிருக்கிற ஆன்மாவின் ஞான ஒளி உடலெங்கும் பரவி, அந்தந்த அவயவங்களில் ஏற்படும் இன்பதுன்பங்களைத் துய்க்குமாறு செய்கிறது", எனக் கூறினும், "ஒருவன் ஒரே காலத்தில் பல சரீரங்களைக்கொண்டு காரியங்களைச் செய்வது தனித்தனி ஆன்ம வியாப்தியாலே ஆக வேண்டாவோ?" என்னும் ஐயத்திற்கு விடை அளிக்கிறார்:

மூலம்: 17. ஒருவன் ஏககாலத்திலே அநேக தேஹங்களை பரிக்ரஹிக்கிறதும் ஜ்ஞாந வ்யாப்தியாலே.

பொருள்: ஒருவன் ஒரேகாலத்தில் பல உடல்களை வகிப்பதும், (அவற்றைக்கொண்டு பல செயல்களைச் செய்வதும்) ஒரே ஆன்மா பல சரீரங்களில் பரவி இருத்தலினாலன்று. பின்னை என்னையோ எனில், ஞானம் பரந்திருத்தலினாலேயே ஆகும்.

சௌபரியினுடைய சிவன், பல சரீரங்களிலும் இன்பதுன்பங் களைத் துய்த்தது ஞானப்பரப்பினாலேயே என அறிக.

ஓர் ஆன்மாவே பல காலங்களில் பல சரீரங்கள் எடுத்தலுண் டாதலால், இங்குக் கூறுவது அதைப்பற்றியன்று என்பதை வற் புறுத்தற்கே இச்சூத்திரத்தில் 'ஏககாலத்திலே' என்னும் வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது.

அவ: ஆன்மா அவ்யக்தம் எனக் கூறப்படுவதன் கருத்தை விளக்குகிறார்:

மூலம்: 18. அவ்யக்தமாகையாவது—கடபடாதிகளை க்ரஹிக்கிற சக்ஷுராதிகளால் தோற்றுதிருக்கை.

பொருள்: 'அவ்யக்தம்' என்பதற்கு, ஆன்மா அணி ஆடை முதலியவற்றைப்போன்று, கண் முதலிய இந்திரியங்களுக்குத் தோற்றப்படும் பொருளாக இல்லையெனக்கொள்ள வேண்டுமே யன்றி, அது பிரமாணங்களாலும் அறியப்படாத பொருள் எனக் கொள்ளுதல் கூடாது.

அவ: 'அசிந்த்யம்' என்பதன் கருத்தை விளக்குகிறார்:

மூலம்: 19. அசிந்த்யமாகையாவது — அசித்தோடு ஸஜாதீய மென்று நினைக்கவொண்ணுதிருக்கை.

பொருள்: ஆன்மா கண்ணாலே காணுதற்கும், கூறுகளாகத் துண்டித்தற்கும் தகுந்ததாயுள்ள அசித்திற்கு ஒத்ததாக இரா மையின், அதனோடு சம்மந்தமுற்ற பொருளாக நினைத்தற்கு யோக்கியமற்றிருக்கை.

அவ: ஆன்மா அவயவமற்றது என்கிறார்:

மூலம்: 20. நிரவயவமாகையாவது — அவயவ ஸமுதாய மன்றிக்கே இருக்கை.

பொருள்: ஆன்மா முற்றும் ஞானமாயிருத்தலின், குடம் தூண் முதலிய பொருள்கள் எங்ஙனம் அவயவக்கூட்டமாக இருக் கின்றனவோ, அங்ஙனமின்றி இருக்கை.

அவ: ஆன்மா என்றும் வேறுபாடற்றது என்கிறார்:

மூலம்: 21. நிர்விகாரமாகையாவது—அசித்துப்போலே விகரிக்கை யின்றிக்கே ஒருபடிப்பட்டிருக்கை.

பொருள்: வேறுபாடற்றிருத்தல் என்பது, அறிவற்ற அசித் தைப்போன்று, அப்போதைக்கப்போது (இமைக்கு இமை) மாறுபாடடைதலின்றி, என்றும் ஒரேதன்மைத்தாயிருத்தல்.

விளக்கம்: காய், கனியாகுங்கால் நிறம் சுவை முதலியவை களின் வேறுபாடு ஏற்படுகின்றமையின், அசித்திற்கு உருவ வேறுபாடும் குணவேறுபாடும் உண்டு என அறிகின்றோம்.

# ஸந்தியாராகம்

சுருக்கி மொழிபெயர்த்தவர்:
ஸ்ரீமதி ஜயலக்ஷ்மி ஆர். ஸ்ரீநிவாஸன்

[சென்ற இதழின் தொடர்ச்சி]

டாக்டரின் கடிதத்துடன் தஞ்சாவூருக்குப் பயணமான லக்ஷ்மணன், "இந்த டாக்டர் என் தமையனாய்ப் பிறந்திருக்கப்படாதா. இவர் மனைவி என் மன்னியாக இருக்கப்படாதா. அப்பொ—அப்பா—என் ஐயா பிழைத்திருப்பாளோ?" என்று எண்ணினான். துயரம் உடலை நடுக்கிற்று...

தஞ்சாவூர் கிருஷ்ணய்யர் தக்ஷிணாதி சங்கீதத்தில் புகழ் பெற்ற வித்வான். சாஸ்திரம் மற்றும் கலை இரண்டிலுமே ஐயர் பாரம்பாரங்கதராக இருந்தார். அவருடைய குரு பரம்பரையும் இதற்கு மிக உதவியாக இருந்தது. எட்டியாபுரம் ராமசந்திர பாகவதரிடம் சங்கீத வித்தையை நாயனாபிள்ளை புஷ்பவனம் இவர்களுடன்கூட அப்பியஸிக்கும் சௌபாக்கியம் ஐயருக்குக் கிடைத்திருந்தது. லயகால விந்யாஸத்திலும் கிருஷ்ணய்யரின் சங்கீதம் புகழடைந்திருந்தது, ஐயருடைய குரு தியாகராஜரின் சம காலத்தினர், மற்றும் நண்பரும் ஆதலால் அவருடைய சிஷ்யருக்கு சங்கீத உலகில் விசேஷ மரியாதை கிடைத்தது. அவருடைய சங்கீதம் மகா வித்வான்களுக்கும் பிரியமாக இருந்ததால் ஐயரை "மகா பாகவதர்" என்று அழைப்பார்கள்.

லக்ஷ்மணன் பாகவதர் வீட்டை யடைந்தபொழுது அவர் அப்பொழுதுதான் சாப்பிட்டுவிட்டுத் தாம்பூலம் போட்டுக்கொள்ள வந்தமர்ந்திருந்தார். யோக க்ஷேமம் ஆனபிறகு, சென்னை டாக்டர் அருணாசல முதலியாரின் கடிதத்தைப் படித்துப் பார்த்தார். லக்ஷ்மணன் பாகவதருக்கு சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தான். பாகவதரும், அவர் மனைவியும், அவர்கள் மைந்தன் சுப்பிரஹ்மண்யனும் லக்ஷ்மணனை வெகு பரிவாகக் கண்டனர். பாகவதரின் மனைவி ஸ்நானம்செய்து வந்த லக்ஷ்மணனுக்குப் பரிவாக அன்னம் படைத்தாள்.

அன்று இரவு மகா பாகவதர் லக்ஷ்மணனைப் பாடச் சொல்லிக் கேட்டார். அவர் என்ன சொல்வாரோ என்று லக்ஷ்மணனின் இதயம் படபடத்தது.

"லக்ஷ்மணா, நீ என் சிஷ்யனாக வந்தது என் பாக்கியமப்பா! உன் வித்தை தெய்வீகமானது. சங்கீத சாஸ்திரம் வித்தையை சொல்லிக்கொடுக்கும்; அது உண்மையான கல்வியன்று. வித்தை உள்ளத்தினுள்ளிருந்து வரவேண்டும். உள்ளத்தினுள் புகவேண்டும். உன்னிடம் இருக்கு அது! உன்னைப்போன்றவனுக்கு வித்யாதானம் செய்தால் என் ஜன்மம் சார்த்தகமாகும்". என்று சொன்னார். லக்ஷ்மணனால் பேசமுடியவில்லை. நன்றியுடன் குருவையும், குருபத்தினியையும் வணங்கினான்.

அன்றிலிருந்து பாகவதரின் குடும்பத்தில் ஒருவனானான். குருவுக்கும், குரு பத்தினிக்கும் பலவிதங்களிலும் சொந்தப் பிள்ளை

யைக் காட்டிலும் அதிகமாகத் தொண்டு புரிந்துவந்தான்- பாகவதரின்வேஷ்டி தோய்ப்பதிலிருந்து, குரு பத்தினிக்குக் குழம்புக்கு அரைத்துக் கொடுப்பது வரைக்கும் செய்வான். லக்ஷ்மணன் மகா பாகவதரிடம் கற்றுக்கொள்ளவேண்டிய வித்தை அனைவதையும் கற்றுக்கொண்டுவிட்டான். பாகவதர் கச்சேரி செய்யப் போகும் இடங்களுக்கெல்லாம் அவனையும் அழைத்துப்போய், தன்னுடன் பாடச் சொல்வார். பாகவதரின் கீர்த்தியுடன்கூட லக்ஷ்மணனின் கீர்த்தியும் பரவவாரம்பித்தது. ஒவ்வொரு தடவை தமக்கு அழைப்புவந்தால் லக்ஷ்மணனைக் கச்சேரி செய்ய அனுப்பி விடுவார். தனக்கு வந்த வரும்படி முழுவதையும் குருவின் பாத கமலங்களில் சமர்ப்பித்து விடுவான் லக்ஷ்மணன்.

''இது உன்னுடையது அப்பனே, எடுத்துக்கொள்!''

''தங்கள் அனுக்ரஹம் ஒன்றுதான் என்னுடையது. வேறொன்றுமில்லை சுவாமி'' என்பான் லக்ஷ்மணன்.

மகா பாகவதரை 'பூர்வீகல்யாணி' என்றும் அழைக்கும் வழக்கம் உண்டு. பூர்வீராகத்தை அவரைப்போல் யாரும் பாடிக் கொண்டிருக்கவில்லை. ராகாபிமானி தேவதை ஐயருக்கு அருளி இருக்கிறாள் என்பார்கள். பூர்வீ அவருடைய ரொம்பப் பிரியமான ராகமானாலும் அதை அவர் வெகு அபூர்வமாகவே பாடுவார். லக்ஷ்மணன் பாகவதர் வீட்டுக்கு வந்து வருடக் கணக்காகியும் அவன் அவர் வாய்மூலம் பூர்வீயைக் கேட்டதில்லை. ஒரு நாள் ''சூக்ஷ்மமாக பூர்வீயைப் பாடிக் காண்பிக்கவேண்டும்.'' என்றதும்,

''அது வேண்டாம்பா... அது ஒரு ராகம் மட்டும் வேண்டாம்'' என்று குரு சொல்லிவிடுவார். ஒருநாள் அலமேலு அம்மாள் சிஷ்யன் மேல் பரிந்துகொண்டு ''இவ்வளவு நாளாக லக்ஷ்மணன் பூர்வீ பாடவேண்டும் என்று கேட்கிறான். இன்று வெள்ளிக் கிழமை. சாயங்காலம் பாடுங்களேன்''

''ஆகட்டும் பாடுகிறேன்', என்று ஒத்துக்கொண்டார்.

சாயந்திரம் பாகவதரின் கச்சேரியில் அவர் பத்தினி மைந்தன் மற்றும் சிஷ்யன் மூவர்தான் சபையோர். கச்சேரி பிரமாதமாக விருந்தது. பூர்வீ பாடவாரம்பித்தார். அமோகமான ராக விஸ்தாரம், அபூர்வ சஞ்சாரம். ஸந்தியா ராகத்தின் கஹன காம்பீர்யம் பாடலில் எடுப்பாகத் தோன்றிற்று. பூர்வீராகத்தை முடித்து ''லக்ஷ்மணா இது பூர்வீ. ஆனால் ஸந்தியாராகம் பூர்வீ இல்லை. எனக்கு நிஜமாகவும் இந்த ராகத்தைப் பாடவரவில்லை. பூமியைப் பிளந்துகொண்டு ஊற்று (Fountain) கிளம்புவதுபோல் இதயத்தைப் பிளந்துகொண்டு ராகம் கிளம்பவேண்டும். என் பூர்வீ இதயத்திலிருந்து கிளம்பவில்லை—தலையிலிருந்து கிளம்புகிறது. உனக்கு பூர்வீயை தத்தம் கொடுத்திருக்கிறேன். நான் விரும்புவதுபோல் என்றாவது பாடிவிடு. அன்று நான் புனிதமாவேன். அதுவே நான் உன்னிடம் எதிர்பார்க்கும் குருதக்ஷிணை அப்பனே என்றார். ''ஆஜ்ஞைப்படி'' என்றான் லக்ஷ்மணன். குருகுலவாசம் முடிந்தது. குருக்களின் மற்றும் குருபத்னியின் பாதங்களில் பணிந்தெழுந்து பிரியாவிடை பெற்று சென்னைக்குக் கிளம்பினான் லக்ஷ்மணன்.

சென்னையில் டாக்டர் தம்பதிகள் அவனை அன்புடன் வரவேற்றனர். டாக்டரின் பிரபாவத்தால் சென்னையில் பற்பல சங்கீத சபாக்களில் லக்ஷ்மணனின் சங்கீதக் கச்சேரி நடந்தது. எந்தப் பத்திரிகையில் பார்த்தாலும் லக்ஷ்மணனைப்பற்றிய புகழுரைகள். அவன் பாடலைப்பற்றி பிரமாதமாகப் புகழ்ந்து எழுதியுள்ள கட்டுரைகள், அவனுக்குக் கச்சேரிகளில் வந்த வரும்படி அனைவதையும் சேர்த்து வைத்திருந்து லக்ஷ்மணன் பெங்களூருக்குப் புறப்படும்பொழுது டாக்டர் அந்த பெரும் நிதியை அவனிடம் ஒப்படைத்தார். வழிசிலவுக்கு மட்டும் ஐம்பது ரூபாய்களை எடுத்துக்கொண்டு பாக்கிப்பணத்தை டாக்டரிடமே திருப்பித் தந்துவிட்டு தன் குருவுக்கு அனுப்பி விடும்படி சொல்லி விட்டான் லக்ஷ்மணன்.

பெங்களூர் ரயில் ஏறி அமர்ந்த லக்ஷ்மணனுக்குத் தானும், ஐயாவும் அவ்விடம் பட்ட கஷ்டங்கள் அனைவதும் நினைவுக்கு வந்தன. ஆகவே, அவன் பெங்களூரில் இறங்க மனம் வராமல் நேராக மைசூர் சென்றான்.

## 14

ராமசந்திரனின் கோர்ட்டு, சண்டைக்குப் பிரபலமாகிவிட்டது. லஞ்சம்பெறும் ஆசையால் அநியாயத் தீர்ப்பு சொல்கிறான் என்று பெயர் அடிபடுவதல்லாமல் எதிர்க்கட்சியினர் மேல்அதிகாரிகளுக்குப் பிராதும் செய்துக் கொண்டுவிட்டார்கள். "வீரகர்னடகா"வில் ராமசந்திரனின் அனியாயப் போக்கை அலசிஅலசிக் கண்டித்து கட்டுரைகள் பிரசுரமான வண்ணமிருந்தன. இனனும் எவ்வளவோ குற்றங்குறைகள் அவனிடம் இருந்தன. இதனைவதும் இவ்வளவு விவரமாகப் பத்திரிகைக்காரர்களுக்கு எப்படித் தெரியும்?"வீரகர்னடகா"பத்திரிகையில் அதிகமாகவே விவரங்கள் வெளிவருவதைக் கண்டான். அந்தப் பத்திரிகாசிரியரை வரவழைத்து இத்தகைய செய்திகளைப் பிரசுரிக்கக் கூடாது என்று சொல்லலாமா என்று பார்த்தான். தான் சொல்லி அனுப்பின விவரத்தையே பத்திரிகாசிரியர் பிரசுரித்து விட்டால்? ராமசந்திரன் கவலையில் ஆழ்ந்தான். செய்வதென்னவென்று யோசித்துக் கொண்டிருக்கும் பொழுதே 'வீரகர்னடகா'வில் மேஜிஸ்ட்ரேட் ஒருவர் ஒருவிதத் தீர்ப்பை எழுதிவிட்டு, பிறகு எதிர்க்கட்சியினரிடம் 'கிம்பளம்' (லஞ்சம்) பெற்றுக்கொண்டு அந்தத் தீர்ப்பை ரத்து செய்துவிட்டு மற்றொரு மாதிரி தீர்ப்பு அளித்த விஷயம் பிரசுரமாகி இருந்தது. ஹைகோர்ட் இந்த விஷயத்தை சரியாக விசாரிக்கவாரம்பிக்கா விட்டால் பத்திரிகாசிரியர் மேஜிஸ்ட்ரேட்டின், பெயர், குலம் கோத்திரத்தைப் பிரசுரிக்கப் போவதாகப் பிரசுரமாகி இருந்தது. ஹைகோர்ட் அதிகாரிகள் ராமசந்திரனைப்பற்றி விசாரிக்கவாரம்பிக்கவே, ராமசந்திரன் இரண்டுமாத லீவில் போக வேண்டியதாயிற்று.

பத்திரிகையில் தன் தமையனின் விஷயம் இவ்வளவுதூரம் அடிபடவே கோபு துணுக்குற்றான். தமையனின் அவகுணங்களை அவனுடைய துயரம் மறைத்தது. தமையன்பால் அவன் மனம்

இறங்கிற்று. ராமுவும் தன் கஷ்டங்களைச் சொல்லி; உதவி நாட உற்ருர் உறவினரின்றித் தவித்தான். அச்சமயம்தான், தனக்கு வேண்டியவர்களை யெல்லாம் முன்பு பகைத்துக்கொண்டு தூர விலகச் செய்த தன் பிழையை உணர்ந்து பச்சாத்தாபப் படலானுன.

கோபு தமையனிடம் மெதுவாக 'வீரகர்னுடகா'வின் அதிபர் வெங்கடேசன்தான என்பதைத் தெரிவித்து, வெங்கடேசனிடம் போய் ராமு கேட்டுக்கொண்டால், வெங்கடேசன் ராமுவைப்பற்றிப் பத்திரிகையில் நாலு நல்ல வார்த்தை எழுதினுல் ரொம்ப நல்லது என்ருன். வெங்கடேசனிடம் சொல்லி ராமுமேல் ஹைகோர்ட்டுக்கு பிராது செய்து கொண்டிருப்பவர்களை பிராதை வாபஸ் வாங்கிக் கொள்ளவும் செய்யலாம் என்ருன். ராமசந்திரன் "ஐயோ, என் தலைவிதியே! வெங்கடேசனின் தயவை நான் நாட வேண்டி இருக்கே".

"ஆனுல் உத்யோகத்தைப் போக்கடித்துக் கொள்ளுயா?"

"அவன் காலைப் பிடிக்கும் காலம் வந்து விட்டதா!"

"உன் தங்கையின் வீட்டுக்கு நீ போக இவ்வளவு யோசனை ஏன்?"

கடைசியில் வெங்கடேசன் அன்று சொன்ன வார்த்தை உண்மையாகி விட்டதே என்று ராமு மனம் நொந்தான். ராமசந்திரன் தன் வீட்டுக்கு வந்தது பார்த்து சாந்தாவுக்கு ஆச்சரியமோ ஆச்சரியம்! அச்சமயம் வெங்கடேசன் வீட்டுக்கு இன்னும் வந்திருக்கவில்லை. அண்ணனும் தங்கையும் கொஞ்ச நேரம் குசலபிரச்னம் பேசினுர்கள். பிறகு மெதுவாக ராமு, தான் வந்த விஷயத்தைப்பற்றித் தங்கையிடம் எடுத்துசொல்லி, வெங்கடேசன் மனது வைத்தால் பேப்பரில் என்னைப்பற்றி நாலு நல்ல வார்த்தை எழுதலாம். என் மேல் ஹைகோர்ட்டுக்கு தூரு (அவச்சொல்) எடுத்துச் சென்றவர்களுக்குச் சொல்லி ராஜீ செய்விக்கலாம். அவன் கை இப்போ மேல் சாந்தா! நான் கீழே விழுந்திருக்கிறேன்"

"அவரும் ஒரு நாள் விழுந்திருக்கவில்லையா? நீ நிர்த்தாக்ஷிண்ணியமாக வீட்டிலிருந்து ஓட்டவில்லையா? இப்பொ உனக்கு எதற்காக உதவ வேண்டும்?"

"என் தங்கை நீ! நீயும் இப்படிச் சொல்லலாமா?"

"தங்கை—உனக்கு தங்கை, தம்பி, மனைவி, மக்கள் யாருமில்லை. பணம், அதிகாரம், அகங்காரங்கள்தான் உன்னுடைய சகல சாம்ராஜ்யங்களும்."

"நான் மகா அபராதி சாந்தா! உங்கள் எல்லோரிடமும் ரொம்பப் பொல்லாதவனுக இருந்தேன். என்னை மன்னித்துக் காப்பாற்ற வேண்டும்" என்று ரொம்பவும் அங்கலாய்த்துக் கேட்டுக்கொண்டான்.



123189

சாந்தாவின் சாந்த முகத்தின் மீது ராமசந்திரனின் பூர்வ சரிதம் கோலமிட்டது. லக்ஷ்மணன்—ஜயாவின் வாழ்வு நினைவுக்கு வரவே அவளுடைய இதயம் கல்லாகி விட்டது. "எல்லோருடைய கல்லறையின் மீதும் தன் சாம்ராஜ்யத்தைக் கட்டவேண்டும் என்று விரும்பினான். எல்லோரும் பாழாய்ப் போகட்டும்; தான் சௌக்கியமாக இருந்தால்போதும் என்று ஆசைப்பட்டான்...... இப்போ இவன் பாழாய்ப் போகும் காலம் வந்திருக்கு. பாழாய்ப் போகட்டும். இதனால் உலகத்துக்கு க்ஷேமம்" என்று உள்ளம் கடுமையாகப் பேசிற்று. மறுக்கணமே "என் அண்ணாவில்லையா! அவிவேகத்தால் அவன் எல்லோரையும் இம்சித்தால் நாமும் அவனை இம்சிப்பதா? இம்சையால் அவன பெரியவனானான். க்ஷமையால் (மன்னிப்பால்) நாம் சிறுமையடைந்தாலும் தேவலை" என்று அவள் மனம் விரும்பிற்று. அந்த வேளைக்கு வெங்கடேசனும் வந்தான். அன்று ராயர் வீட்டைவிட்டு வந்த பிறகு மாப்பிள்ளையும் மைத்துனனும் இன்றுதான் முதன்முதல் சந்தித்தனர்.

இருவரிடையேயும் சுமுகமாகவார்த்தைகள்கிளம்பி, கடைசியில் ராமு கோரிய வேண்டுதலை வெங்கடேச் நிராகரித்து விட்டான். ராமு உருக்கமாக "இதனால் என்கதி என்னவாகும் என்று யோசித்தாயா?"

"யோசித்தேன். வேலையிலிருந்து 'டிஸ்மிஸ்' (Dismiss) ஆகலாம்

"அது உனக்கு சம்மதமா?"

"முழு சம்மதம்! எனக்காகவும் சம்மதம், உலகுக்காகவும் சம்மதம். உன் அதிகாரதர்ப்பத்தின் சுழலில் சிக்குண்டு, எவ்வளவு குடும்பங்கள் பாழாகி விட்டன! எவ்வளவு பெயர் நிரபராதிகள் வீடுவாசல் இல்லாமல் ஆண்டிகளாகி விட்டனர் தெரியுமா? கைக்குள் அதிகாரம் (Power) இருக்கு என்று மக்களை இம்சிக்கத் தொடங்கினால் எவ்வளவு நாள் நடக்கும்? என்னை மிதித்துத் துவைத்தாய். ராயர் தன் பெருந்தன்மையால் போட்ட சாதத்தில் கல் கலந்தாய் வீட்டைவிட்டுத் துரத்தினாய். சொந்தத் தம்பியின் மனைவியைப் பாடாய்ப்படுத்தினாய். பெற்றதாயின் கண்ணில் ஜலம் வரவழைத்தாய். இப்போ நீ பெரிய மாஜிஸ்ட்ரேட்! மனம் தோன்றினபடி சிறைக்கு அனுப்புகிறாய். லஞ்சம் கொடுக்காதக் கட்சிக்காரர்களைக் கொல்கிறாய்..."

"உண்மை, உண்மை. என்னை மன்னித்து உதவமாட்டாயா?"

"முடியாது. என்னை துரும்பைவிட இழிவாக நினைத்துக் கொண்டிருந்த நீ ஒருநாள் என் முன்னால் வந்து மண்டியிட்டு கிருபாபிக்ஷை வேண்டுவாய் என்று எனக்குத் தெரியும். அப்பொ உன் காலம்—இப்பொ என் காலம், என் காலம் வந்தால் உனக்கு புத்திபுகட்ட வேண்டுமென்றிருந்தேன். காலம் வந்து விட்டது..." என்று பகர்ந்து விருட்டென்று வெளியே சென்று விட்டான். ராமு பயத்தால் வெயர்க்க விருவிருக்க நடுங்கிக்கொண்டே "போய் வருகிறேன்மா, சாந்தா. முடிந்தால் உன் அகமுடையானுக்குச் சொல்லிப்பார்".

"ஆகட்டும் அண்ணா" என்றாள் சாந்தா. அண்ணாவின்பரிதாப நிலையைக் கண்டு அவள் கண்களில் ஜலம் முட்டிற்று.

பிறகு அவள் வெங்கடேசனிடம் தன் தமயனுக்காக வெகுவாக மன்றாடினாள். அவள் முயற்சி வீண்போகவில்லை. வெங்கடேசன் பெருந்தன்மையுடன் மைத்துனனின் தீச்செயல்களை மன்னித்து அவனை கடும் சோதனையிலிருந்து மீட்கச் செய்தான். ஹைகோர்ட்டிலிருந்து ராமுவுக்கு ஐந்து வருடகாலம் சம்பள உயர்வை நிறுத்தியதுடன் கடுமையான எச்சரிக்கையுடன், மைசூரிலிருந்து தொட்டபள்ளாப்புரத்துக்கு மாற்றப்பட்டான். ராமு வெட்கத்தால் குன்றிப்போனான். ஆனால் அவன் தலையிலிருந்த பெருஞ்சுமை இறங்கியதுபோல் நிம்மதியுற்றான்.

(தொடரும்.)

---




வை. மு. கோ.

1. வருஷக்கணக்காக சந்தோஷப்பட்டாலும் அதன் நீடிப்பும் அதைப்பற்றிய சிந்தனையும் மக்களுக்குத் தெரிவதே இல்லை. ஆனால் க்ஷணப்பொழுது கவலை கண்ணீர் கஷ்டம் இவைகளை அனுபவித்தால்கூட அது மலையளவாகவே தோன்றுகிறது. இது தான் மனித இயற்கையின் நியதிபோலும்.

2. வருஷக்கணக்காகத் தூங்கியும் விழித்தும் உழைத்தும் உள்ள மனிதருக்கு, உடல் நோய் வாய்ப்பட்ட காலத்தில் சில இரவுகள் தூங்காத நிலை—உண்ணாத—உழைக்காத நிலை—தான் மலைபோல் தோன்றி இப்படியேதான் காலம் முற்றிலும் இருப்பது போல் தோன்றிக் கலங்கச் செய்கிறது.

3. ப்ரதி தினமும் வேளாவேளைக்கு சரியானபடி சாப்பிடும் போது சாப்பாட்டின் அஜீரணத்தைப்பற்றி நினைப்பதே இல்லை. அல்லது சாப்பாட்டின் செலவைப்பற்றி—தயாரிக்கும் சிரமத்தைப் பற்றிச் சிந்திப்பதே இல்லை. ஏதாவதொரு ஸூக்ஷ்மமான சந்தர்ப்பங்களில் சாப்பாடு இவர்கள் எதிர்பார்க்கிறபடி கிடைக்காவிடிலோ—அல்லது–தாம்தமாய்க் கிடைத்தாலோ கொஞ்சமாய்க் கிடைக்கும் போதோ! தாம் முழு த்ருப்தியுடன் சாப்பிடாத பரிபவம் பூர்ண பட்டினி இடப்பதுபோலவே தோன்றி அதை சொல்லவும் துணிகிறார்கள்.

# வாழ்க்கை தீபம்

ஸௌபாக்யவதி லக்ஷ்மிக்கு மங்களமுண்டாகுக! உபயகுசலம்.

உன்னில்லத்தில் மங்களகரமாகப் பால் பொங்கி இருக்கும் என்று நம்புகிறேன். எங்கள் இல்லங்களிலும் சந்தோஷமாகப் பால் பொங்கியது. "காங்கிரஸ் மகாநாட்டிற்கு வரமுடியாது போய்விட்டது. நீ போயிருந்தாயா? நேரில் கண்ட சகல விஷயத்தையும் எனக்கு எழுது; பத்திரிகையில் படித்தது எனக்குப்போதவில்லை. தலைவர்களை நேரில் பார்த்த பாக்யத்தையும் உன்னருயிர் நேசி ஸ்ரீமதி அம்புஜம்மாளை வரவேற்புக் கமிட்டியின் தலைவியாய்த் தேர்ந்தெடுத்த பெருமைக்கும் மிகமிகச் சந்தோஷத்துடன் பாராட்டுகிறேன் என்பதை அம்புஜம்மாளுக்குத் தெரிவிக்கவும்" என்றும் நீ ஏதேதோ எழுதியிருக்கிறாய். வாஸ்தவம்! வெளியூரிலிருக்கும் நீ இம்மாதிரி எதிர்பார்த்து எழுதுவது சகஜந்தானே.

லக்ஷ்மீ! உலகத்தில் சொல்வது ஒன்று; செய்வது ஒன்று; நினைப்பது ஒன்று; நடப்பது ஒன்று... என்ற வாசகங்கள் பொய்யாகிவிடாதல்லவா? நீயே தெரிந்துகொள்ளு. நான் விவரம் எழுதவேண்டாம். ஆனால், நமது மகாத்மாஜி ஸேவாசங்கத்திலிருந்து தேச ஸேவகிகளின் படை திரட்டித் திறமையான—கண்ணியமான—தலைவி ஸ்ரீமதி அலமேலு வெங்கட்ராமன் அவர்களுடன் அனுப்பிய விஷயம் உனக்குத் தெரியுமல்லவா? அவர்கள் ஸேவகியர்களுடன் சென்று மிக மிக வெற்றிகரமாக காங்கிரஸ் மகாநாட்டின் ஸேவைகளைச் செய்து வாகை சூடிவந்தார்கள். அவர்கள் அழைத்துச் சென்ற ஸேவகிகளில் ஒருத்தியான சிறுமி விஜயலக்ஷ்மி தான் மகாநாட்டிற்குச்சென்றுவந்த சகல அனுபவங்களையும் தனக்குத் தெரிந்தமட்டும் எழுதியிருப்பதை மோகினியில் படித்துத் தெரிந்துகொண்டிருப்பாய். காங்கிரஸ் மகாசபை நம் சென்னையில் நடந்த வைபவத்தில் நான் கண்ட சில காட்சிகளை மட்டும் நான் எழுதுகிறேன்.

எனக்கு புத்திதெரிந்த முதல் திருவல்லிக்கேணி ஸ்ரீபார்த்தஸாரதிஸ்வாமி கோயிலில் ஏதாவது பெரிய உத்ஸவங்கள், புரட்டாசி சனிக்கிழமை, தை... ஆடி... முதலிய வெள்ளிக்கிழமை தினங்களில் கோயில் கூட்டம் மென்னியை அமுத்தும்; கர்ப்பக்ரகத்தில் ஸ்வாமி தரிசனமே செய்ய இடம் கிடைக்காது. மற்றய தினங்களில் தாராளமாக தரிசனம் செய்து இன்புறலாம். அம்மாதிரி இருந்த காலத்தில் ஆஸ்திகம், நாஸ்திகம் குறித்த வீண்பூசல்களே இல்லை. இப்போது கட்சிகளும், கலர்களும் நாஸ்திகப்பேய்பிடித்து ஆடும் அமர்க்களத்தில் கோயிலில் நித்யகல்யாணம் பச்சை தோரணம் என்றால் மிகையாகாது. அத்தனை ஆனந்தமாய் உத்ஸவாதி

காலங்களைப்போலவே கூட்டம் நிறைந்து பக்திப்பரவசத்துடன் ஸேவிக்கும் காட்சியைக் காணும்போது நாஸ்திக வாதப்பூசலுக்கும் ஒரு சவுக்கடியை பகவானே கொடுத்துத் தன் மக்களின் உள்ளங்களில் பக்திப் பயிரைவளர்த்து ஆஸ்திகத்தைத் தழைத்தோங்கச் செய்கிறார் என்பது வெட்டவெளிச்சமாக நன்றாகத் தெரிகிறதில்லையா ?

அதுவும் தவிர கதாகாலக்ஷேபங்களும் உபன்யாஸங்களும் ரேடியோவில் ப்ரதி வெள்ளிக்கிழமைப் பகலில் மாதர் நிகழ்ச்சிகளில் பக்தியை வளர்க்கும் உத்தம விஷயங்களும் நாளுக்கு நாள் அபாரமாக வளர்ந்துகொண்டே வருகிறதை நாம் ப்ரத்யக்ஷமாகப் பார்க்கிறோம். மார்கழி மாதத்தில்தான் பேட்டைக்குப் பேட்டை, தெருவுக்குத் தெருவு, திருப்பாவையும் திருவெம்பாவையும் உபன்யாஸங்களாயும் இசை வெள்ளமாயும் எப்படித்தான் ப்ரவாகம்போல் பெருகி பக்தியை வளர்த்தது என்பதை விவரிக்கவே முடியாது. நமது மகாத்மாஜி ஸேவாசங்கத்தின் இசைகோஷ்டியினர் ஸ்ரீபார்த்தஸாரதி ஸ்வாமி கோயிலில் ப்ரதிதினமும் திருப்பாவை இசையுடன் பாடி 15 தினங்கள் விடாது கைங்கர்யம்செய்து பேறுபெற்றது குறிப்பிடத் தக்கது. திருப்பாவைப் போட்டிகளோ ! சொல்லத்தாமில்லை ; நமது சங்கத்தில்கூட திருப்பாவைப் போட்டி நடந்தது. சங்கத்து உபதலைவி ஸ்ரீமதி N. புஷ்பம்மாள் அவர்கள் திருப்பாவைப்போட்டியில் முதல் பரிசுக்குத் தங்கப் பதக்கம் அளித்தார்கள். இப்படியாக பக்திக்கனல் எங்கும் ஜ்வாலைவிட்டு ப்ரகாசிப்பதைப் பல படியாக நாம் பார்க்கிறோம்

காங்கிரஸுக்காக வெளியூரிலிருந்து வந்துள்ள பல தேசத்தினர். பல பாஷைக்காரர்கள் கோயிலுக்கு வந்து ஸ்வாமி தர்சனம் செய்த ஒரு அழகைத்தான் இப்போது சொல்லவந்தேன். வெளியூரிலிருந்து வந்த ஆயிரக்கணக்கான ஜனங்களை நான் ஸ்ரீ பார்த்தஸாரதிப் பெருமாள் கோயிலில் கண்டு பூரித்தேன். அதோடு தை அமாவாஸையும் சேர்ந்ததால் அத்தனை பேர்களும் சமுத்திர ஸ்நானத்தைச் செய்துவிட்டு பக்தியுடன் கோயிலுக்குவந்து கும்பல்கும்பலாக ஸ்வாமி தரிசனம் செய்த அழகை என்னென்று வர்ணிப்பது ? வடநாட்டுக்காரர்கள். ஒரு பெரிய கூட்டமாக ஸன்னதியில் வந்து ஸேவிக்கையில் ஸ்வாமியின் பெயர் என்ன?... என்று கேட்டார்கள்.

" மூலஸ்வாமியின் பெயர் வெங்கடக்கிருஷ்ணன். அம்மன் பெயர் ருக்மணிதேவி.. உத்ஸவரின் பெயர் பார்த்தஸாரதி" என்று சொன்னார்கள். திருப்பதியில் எழுந்தருளி இருக்கும்

ஸ்வாமிக்கு பாலாஜி என்று தான் அவர்கள் சொல்வது வழக்கம். அதேபோல் இங்கு வேங்கட க்ருஷ்ணன் என்ற பெயரைக் கேட்ட உடனே பாலாஜி க்ருஷ்ணன்! என்று பெரிதாகக் கத்திப் பூரிப்புடன் பாவசமாகி ஸேவித்தார்கள். சின்னச் சின்ன குழந்தைகளை எல்லாம் அங்க ப்ரதக்ஷணம் செய்வது போல் ஸன்னிதியில் கிழே கிடத்தி பாலாஜி க்ருஷ்ணன்கீஜெய், என்று தாமும் கோஷமிட்டவாறு குழந்தைகளையும் கத்தச் செய்த காட்சியைப் பார்க்கும்போது ஆனந்தமேலீட்டால் கண்ணில் ஜலமே வந்துவிட்டது. கூடவிருந்தவர்கள் வியப்புற்று அதையே பார்த்துக்கொண்டு நின்றார்கள். அரைகுறை ஹிந்தியில் பேசும் ஒரு துவிபாஷி அவர்களுடன் கூடவந்து ஏதேதோ சொல்லிக்கொண்டே ஸன்னிதிகளைக் காட்டினான்.

அமாவாசையன்று வந்த கூட்டம் கணக்குவழக்கில்லை. செட்டி நாட்டைச் சேர்ந்தவர்கள் ஆண்களும் பெண்களும் ஏராளமாகவந்து ஸ்வாமி தரிசனம் செய்தார்கள். ஆந்திரர்களின் கூட்டமும் சொல்லத்தரமில்லை இம்மாதிரி கூட்டத்தையும் பக்திக்கனலின் ஜாஜ்வல்யமான ப்ரகாசத்தையும் பார்க்கும்போது லோகத்தில் பக்திப்பயிர் எத்தனை சிறப்பாக வளர்ந்திருக்கிறது என்பது கூறாமலேயே விளங்குகிறதல்லவா! காங்கிரஸ் மகாநாட்டின் பயனாகக் தேசத்திற்கு எத்தனையோ நன்மைகளும் எதிர்காலத்திற்கான பல உத்தமமான தீர்மானங்களும் நிறைவேறியதோடு பக்தி எத்தனை தூரம் வளர்ந்திருக்கிறது என்பது நன்றாக ஆணித்தரமாகத் தெரிந்தது கண்டு உள்ளம் பூரிக்கின்றது. காங்கிரஸ் மகாசபையின் சகல நடவடிக்கைகளையும் கண்டும் கேட்டும் படித்தும் ஆனந்தித்ததைவிட அதிகமான ஆச்சரியத்தை 5 நிமிஷத்திற்கு 1000 இட்லி செய்யும் மின்ஸார யந்திரத்தைக் கண்டும் 5 நிமிஷத்தில் மூட்டை மூட்டையாக அரிசியை வடித்துத்தள்ளும் மின்ஸார யந்திரத்தைக்கண்டும் ஆனந்தம் அடைந்து பூரித்துப்போனார்கள். அந்த மிஷின்கள் மாவரைப்பதையும் இட்லி சுட்டுத்தள்ளுவதையும் பார்ப்பதற்காகவே பல ஜனங்கள் நெருக்கியடித்துக்கொண்டு ஒரு மைல் தூரம் நடந்துசென்று பார்த்துவந்தார்கள். தலைவர்களின் தரிசனம், ப்ரம்மாண்டமான அலங்காரமுடைய பந்தல், கோபுரம், சித்திரம், யானை, ப்ரகாச விளக்குகள், அணிவகுத்து அழகாக ஸேவை செய்யும் சேவிகைகளின் அத்புதக் காட்சி, இவை தவிர, கடைகள் ஓட்டல்கள் கேட்கவே வேண்டாம். இத்தனை வைபவங்களையும் லக்ஷக்கணக்கான ஜனங்கள் கண்டு களித்த வைபவத்தை, ஆயிரக்கணக்கான மக்கள் கோயில் ஸ்வாமி தரிசனம் செய்யும்போது பேசிக்கொண்டதைக் கேட்டு நான் சகலமும் அனுபவித்ததாக ஒரு த்ருப்தியடைந்துவிட்டேன். ஜெமினி ஸ்தாபகர் செய்திருந்த கோபுர

லக்ஷ்மீ! நமது ஸேவாசங்கத்தில் தை வெள்ளிக்கிழமை விழா வெகு சிறப்பாக நடந்தது. முதல் கிழமை பொங்கலன்றே அமைந்தது மிகவும் விசேஷம். அன்று சங்கீத வித்வான் கௌஸல்யா ரங்கநாதன் வாய்ப்பாட்டுப் பாடினர். மிகவும் நன்ருக அமரிக்கையாக இருந்தது. உபயத்தை ஸ்ரீமதி ராஜம்மாள் வெங்கட்ராமன் நடத்திவைத்தார்.

இரண்டாவது வெள்ளிக்கிழமையன்று சங்கத்தின் இசை மாணவிகளாகியலலிதகுமாரி,புச்சம்மா,ராஜலக்ஷ்மி,ருக்மணி, மற்ருெரு வைசியச்சிறுமி ஆகபலர் நல் இசைவிருந்தளித்து ஜமாய்த்துவிட்டார்கள். குடியரசு தினத்தன்று காலையில் குழந்தைகள் வித்யாலயத்துக்குழந்தைகளை நமது சங்கத்திலிருந்து காங்கிரஸுக்குச் சென்று ஸேவை புரிந்து வெற்றிகரமாகத் திரும்பிவந்த ஸேவகிகளும் அவர்களை மிகத்திறமையுடன் அழைத்துச் சென்று அபாரமாக ஸேவை புரிந்து வெற்றிவாகையுடன் திரும்பிய ஸ்ரீமதி அலமேலு வெங்கட்ராமன் தலைமை தாங்கி ஊர்வலமாக வந்த காட்சி மிகவும் அத்புதமாக இருந்தது. ஸ்ரீமதி ராஜம்மாள் வெங்கட்ராமன் கொடி ஏற்றினர். மாலையில் அலமேலுவெங்கட்ராமன் தலைமைவகித்து காங்கிரஸின் சகல விஷயங்களையும் கூறித் தனது ஸேவகிகளின் சிறந்த தொண்டைப் பாராட்டியும் பேசினர்கள். ஸேவகிகளாகச் சென்று மிக்க மகிழ்ச்சியுடன் ஸேவைபுரிந்துவந்தவர்களில் ஸ்ரீ லக்ஷ்மியும் கமலாவும் தங்கள் உத்ஸாகத்தை அப்படியே கொட்டியளந்து தங்களனுபவங்களைப் பேசினர்கள். பிறகு டீச்சர். A. ருக்மணி, சுப்பலக்ஷ்மி, பத்மினி ஸ்ரீனிவாஸன் முதலியோரும் பேசினர்கள்.

மூன்ருவது வெள்ளிக்கிழமை ஸ்ரீ G. P. கமலா. என்கிற சிறுமி கச்சேரி இரண்டரை மணி காலம் ஜமாய்த்துவிட்டாள். கச்சேரி செய்யக்கூடிய யோக்யதையும் கச்சிதமான ஞானமும் விசாலமான கற்பனைகளும்,அபார இனிமைவாய்ந்த நல்ல கவுள சாரீரமும் கூடிய அவள் சங்கீதம் மிகமிக நன்ருக அமைந்தது. கச்சேரிகளுக்கெல்லாம் ஸ்ரீமதி சுபத்ரா வெகு அனுஸரணையாகப் பிடில் வாசித்து ரஸிக்கச் செய்ததோடு அவருடைய குமாரன் சிரஞ்சீவி வெங்கடேசன் அருமையாக மிருதங்கம் வாசித்தது குறிப்பிடத் தக்கது.

உன் மாமி.

---

ஜகன்மோகினி, 32-வது ஆண்டு, 1955

தனிப்பிரதி அணு 4. வருடச் சந்தா ரூ. 3. (வெளிநாடு ரூ. 3-12)

# மங்கிலிப் பெண்டுகள்

என்னைப்பார்ப்பவர்கள் எல்லாம் மங்கலிப் பெண்டுகள்பாட்டி என்றுதான் சொல்வது வழக்கம். எனக்கு எங்கம்மா வைத்த பெயர் பாக்யலக்ஷ்மி என்பதாகும் ஆனால் எனது குடும்ப வைத்யத்தின் சிறப்பால் என்பழைய பெயர் மாறிப்போய் மங்கிலிப் பெண்டுகள் மாமி, மங்கிலிப் பெண்டுகள் பாட்டி என்று க்ரமமாக மாறிவிட்டது. எங்கப் பாட்டி குடும்ப வைத்தியம் நன்றாகத் தெரிந்தவளாதலால் அவள் செய்த சகலமுறைகளையும் நான் கற்றுக்கொண்டு விட்டேன். கடவுள் கருணையால் கைராசியும் நிறைய உண்டாகி விட்டது. என் கையால் ஒரு சுக்கு, மிளகு கஷாயம் போட்டுக் கொடுத்தாலும் சரி. வேப்பிலை உருண்டை அரைத்துக் கொடுத்தாலும் சரி, உடனே குணமாகி நம்பிக்கை உண்டாகி விட்டால் அவர்கள் வீட்டுக் கல்யாணங்களுக்கு என்னைத்தவிர மங்கிலிப் பெண்டுகளுக்கு உட்காரவைக்கவே மாட்டார்கள் எனக்கு வருஷத்தில் குறைந்தது பத்துப் புடவைகளுக்குப் பஞ்சமே இல்லை. காலணா கொடுத்து நான் ஒரு இழை நூல்கூட வாங்கியதில்லை. அதுமட்டுமா! நான உடுத்தும் புடவைகளில் சிலவற்றை என் ஏழைத்தங்கைகளுக்கும் புதியபுடவைகளை என் பெண்ணுக்கும்கூட கொடுத்துவிடுவேன். இப்படியே நான் வைத்யம் செய்கிற வீடுகளில் மட்டுமின்றி என் புகழ் இதர இடங்களிலும் பரவி வந்தது. அதன் பலனாக அடிக்கடி சாப்பாடும் ரவிக்கைகள் வரும்படியும் அதிகரித்தது. எனது வழக்கமான வீட்டுப்பிள்ளை ஒருவன் சின்ன பையனாக இருக்கையில் அடிக்கடி நோயால் வருந்துவான். என் கை வைத்யத்தினால் பையன் வெகு நன்றாக ஆய்விட்டதால் அவர்கள் வீட்டில் எனமதிப்பு மலைபோல வளர்ந்தது. அதே பையன நன்றாகப் படித்துச் சீமைக்கும்போய் படித்துப் புகழ்பெற்று வந்தான். அதன் பிறகுதான் அவனுக்குக் கல்யாணம் எனபதால் எனபாடு குஷிதான் என்று ப்ரமாதமாய் எதிர்பார்த்தேன். கல்யாணப்பிள்ளையின் தாயார் 200 ரூபாயிக்குப் புடவை வாங்கிக்கொள்ளும்படி சொல்லி விட்டார்கள். முதல்தரமான புடவை வாங்கியும கொடுத்துவிட்டேன். கல்யாணததிற்கு முன்பு மங்கிலிப் பெண்டுகள் நடத்தும்போது கல்யாணப்பிள்ளை என்ன செய்தான் தெரியுமோ! குடும்ப வைத்தியம் செய்ததற்காக இந்தம்மாளுக்குப் புடவை கொடுத்து வந்தோம். இப்போது எனக்குக் குடும்பவைத்தியம் செய்வது ஸ்ரீமான் நாராயணன் அவர்கள்; அவருடைய தர்மபத்னியாகிய இந்திராதேவிக்குத்தான் அது உரியது. ஆகையால் சாப்பாடும் ரவிக்கையுடன் தாம்பூலமும் நாட்டு வைத்திய அம்மாவுக்கும் புடவையை இந்திராதேவிக்கும் கொடுத்து விடுவது என்று சட்டம் போட்டுவிட்டான்.

நான் மங்கிலிப் பெண்டுகள் சரிகைப் புடவையுடன் வீட்டுக்கு வருவேன் என்று என் வீட்டினர் எதிர்பார்த்தார்கள். 200 ரூபாயிக்குப் பதில் ஒரு சைபரை எடுத்துவிட்டு 20 ரூபாயிக்கு ஒரு புடவையை வாங்கி கல்யாணப் பிள்ளையின் தாயார் கொடுத்தாள். அதோடு த்ருப்தியாகத்தான் வீட்டிற்கு வந்தேன். சைபருக்குத்தான் மதிப்பில்லையே என்றும் மனந்தேறினேன். எப்படியாவது எனக்கு மங்கிலிப் பெண்டுகள் மட்டும் என் கடைசி மூச்சுவரையில் கிடைத்தால்போதும்; அதுதான் எனப்ரார்த்தனை.

துப்பறியும் வீர சிங்கம் **ராஜாராம் நாயுடு**

வை. மு. கோ. 112-வது நாவல்

"ஸார்! இன்ஸ்பெக்டர் ஸார்! நான் சொல்வதையும் சற்றுக் கேளுங்கள் ஸார்! நான் சின்னப் பையன் தான்; இருந்தாலும் என் வார்த்தையைக் கேளாமல் இப்படி இவர் அநியாயமாய்ச் சொல்வதைமட்டும் கேட்டுவிடாதீர்கள்" என்று துடுக்காகவும் வயிற்றெரிச்சலுடனும் சொல்வதைக் கேட்ட பேனு சொந்தக்காரர்கள் பல்லைக் கடித்து விழித்துப் பார்த்தார்கள். இன்ஸ்பெக்டர் மட்டும் சாவதானமாக ஒரு ஆஸனத்திலமர்ந்து, பின், "டேய்! என்ன சொல்லவேணுமோ அதை மடமடவென்று சொல்லுடா" என்று அதிகாரத்துடன் சொன்னர்.

ராஜு ராம்:—ஸார்! இந்த ஸ்டேஷனில் ஜம்புலிங்கம் என்பவர் இருக்கிருரே அவரை தயவுசெய்து கூப்பிடுங்க, ஸார்!" என்ற உடனே எல்லோரும் கடகடவென்று சிரித்துவிட்டார்கள் பேனுவின் சொந்தக்காரன் கோபமும் சிரிப்பும் கலந்த த்வனியில் ஏளனமாய்ப் பார்த்தபடியே, "இன்ஸ்பெக்டர் ஸார்! பேனுவைத் திருடிய வீரன் கையும் மெய்யுமாய் கொட்டாப்புளிபோல் நிற்கையில் துப்பறியும் புலி ஜம்புலிங்கம்அவர்கள் வந்து இந்த விசித்திரமான துப்புதுலக்கச் செய்யவேண்டும் போலிருக்கிறது! ஜம்புலிங்கத்தின் பெயரைப் பையன் எப்படித் தெரிந்து கொண்டிருக்கிருனே தெரியவில்லை. மொகரக்கட்டையைப் பாரு! சுண்டைக்காய்ச் சிறுவன் ஜம்புலிங்கத்தைக் கூப்பிடச் சொல்லுகிருனே! வெட்கங்கெட்டவன்! ஏண்டா! தடிப்பயலே! இதென்ன கொலை, களவு, மோசடி முதலிய வழக்குகளில் சேர்ந்தவை என்று நினைத்துவிட்டாயா?.... ஸார்! இந்த அல்பக் கழுதையின் பேச்செதற்கு ஸார்?" என்று தடதடவென்று பொறிந்து தள்ளினுன்.

இன்ஸ்:—கொஞ்சம் பொறுங்கள் ஸார்!......திருடுவதில்கூட சாமர்த்தியமாய் தைரியமாய் போலீஸாரிடம் பயப்படாமல்பேசுகிருனே! அதைக்கொண்டாடவேண்டும் ஸார்! போலீஸ்காரர்கள் என்ருலே பெரியவர்கூட பயந்து நடுங்குகிருர்கள். சிறுகுழந்தைகளைப்பற்றிக் கேட்க வேண்

டாம். அப்படிக்கிருக்க, இவன் தைரியமாய்ப் போலீஸ் ஸ்டேஷனில் போலீஸ்காரனுக்கு எதிரிலேயே பேசுகிறான் என்றால் அதையும் கேட்டுத்தானாகவேண்டும். நீங்கள் சற்றுப் பேசாமலிருங்கள்.........ஏண்டா, பையா! ஜம்புலிங்கத்தைப்பற்றி உனக்கு என்னடா தெரியும்? அவரை எதற்காகக் கேட்கிறாய்? அவரை நீ பார்த்திருக்கிறாயா?

**ராஜா:**—நான் இப்போதுதான் அரைமணி நேரத்திற்கு முன்பு நடுத்தெருவில் பார்த்தேன். அதற்கு முன்பு அவரைப்பற்றி எனக்கு ஒன்றுமே தெரியாது. அவர் பெயர்கூடத் தெரியாது சார்! சற்று முன்பு அவர் ஏதோ ஒரு கொலை வழக்கைக் கண்டு பிடிப்பதற்காக பெரிய பண்டிதர் வேஷமணிந்துகொண்டு, "விசாலரஸ்தா யாங்குளது? யாம் ஆங்கிலபாடை அறியோம்; சென்னைப்புலவர்.... என்று ஏதேதோ கடகடமுடமுட என்று பேசினார்; அப்போது நான் அந்தக் கூட்டத்திலிருந்தேன்.........

பேனாவின் சொந்தக்காரன் அபாரமான கோபத்தையடைந்து, "ஸார்! சுத்தப்பொய்சொல்கிறான் இவன். பேனாவைத்திருடிக்கொண்டு ஓடிவருவதை மறைக்க இந்தக் கதை வேறு கட்டுகிறான். கொலை கேஸாவது? பண்டித வேஷமாவது? இதெல்லாம் என்ன ஹம்பக் வார்த்தை ஸார்! வீணாக இவனிடம் பேசிக் காலதாமதம் செய்கிறீர்கள்"....... என்றார். இன்ஸ்பெக்டர் அவனை அடக்கிவிட்டு, "உம் மேலே என்னடா சொல்ல வேண்டும்?" என்றார்.

**ராஜா:**—அப்போது ஒரு பள்ளிக்கூடத்து உபாத்யாயர் அங்கு வந்தார் ஸார்; பண்டிதர் பேச்சு எங்களுக்குப் புரியாமல் சிரித்தோம். உபாத்யாயர் விளக்கிப் பேசினார். ஒரு ரிக்ஷாக்காரன் அங்கு வேடிக்கைப் பார்க்க வந்தான். அவனைக் கொலைக்கேஸுக்காகக் கைதுசெய்து அழைத்துக்கொண்டு போய்விட்டார். அப்போதெல்லாம் நான் அங்குதான் வேடிக்கைப் பார்த்துக்கொண்டு நின்றிருந்தேன். ஜம்புலிங்கத்தைக் கூப்பிடுங்க ஸார்; அவர் என்னிடம் பேசியிருக்கிறார். அவருக்கு என்னை அடையாளம் தெரியும். கூட இரண்டு சேவகர்கள் சாதா உடையில் வந்தார்கள். அவர்களையாவது கூப்பிடுங்க ஸார்; இல்லாவிட்டால் இந்தப் போலீஸ் ஸ்டேஷனுக்குத்தான் அவர்கள் வந்தார்கள். ரிக்ஷாக்காரனை வந்த கொலைகாரனை அவர்கள் இங்குதான் வைத்திருப்பார்கள். லாக்கப்பில் அவன் இருப்பான். என்னைப் பார்த்தால் நான் நிரபராதி என்று அவன்கூட சொல்லிவிடுவான் ஸார்!—என்று

தைரியமாகப் பேசுவதைக் கேட்ட பேனாக்காரனுக்குக் கோபம் பீறிட்டுக்கொண்டு வந்தது. இன்ஸ்பெக்டருக்கு ராஜாமீது ஒருவிதமான மதிப்பும் த்ருப்தியும் ஏற்பட்டதால் பையனைத் தட்டிக்கொடுத்து முதுகைத் தடவியவாறு, “பையா! உன் பேரென்ன ?” என்று கனிவுடன் கேட்டார்.

ராஜாராம் அபாரமான ஸந்தோஷத்துடன், “என் பெயர் ராஜாராம் நாயுடு. என்னை வீட்டில் செல்லமாக ராஜா என்றுதான் கூப்பிடுவார்கள்; பள்ளிக்கூடத்தில் ராஜா ராம் என்பார்கள்....ஸார்! அந்த ஜம்புலிங்கத்தைக் கூப்பி டுங்கள் ஸார்! பார்க்கவேணும்போலிருக்கிறது” என்று கெஞ்சலாகக் கேட்டான்.

“ராஜாராம் நாயுடுகாரு! நான்தான் ஜம்புலிங்கம்; நீ சொல்லியபடி பண்டிதனாக வந்தபோது நீ என்னை வேஷத்தில் பார்த்ததால் உனக்கு என்னைத் தெரியவில்லை. உன்னைப் பார்த்த உடனே நான் உன்னைக் கூட்டத்தில் பார்த்ததால் தெரிந்துகொண்டேன்” என்று சொல்லியது தான் தாமதம்....பேனா சொந்தக்காரர்களுக்குத் தூக்கி வாரிப் போட்டது. ராஜாராமனுக்கோ வியப்பும் சந்தோ ஷமும் கரைபுரண்டு ஓடியது. “ஆ!....நீங்களா ஸார், அந்த பண்டிதர் வேஷமணிந்த ஜம்புலிங்கம்? நீங்களா ஸார்; ஆஆ!” என்று அவனையறியாத ஆனந்தப்பூரிப்புடன் அவரைத் தடவுகிறான்; ஏறஇறங்கப் பார்க்கிறான். “ஸார்! நீங்கதான் பண்டிதர் வேஷம் போட்டவர் என்று தெரி யவே இல்லை ஸார்!” என்று ஒரே ப்ரமிப்புடன் கூறி அவரைத் தட்டுகிறான். குழந்தையைப்போல் இடுப்பைத் தன் கையால் வளைத்துத் தழுவுகிறான். அவர் கைகளை எடுத்துப் பிடித்துக்கொள்கிறான்.

இந்த உணர்ச்சி மிக்க செய்கைகளைக் கண்ட ஜம்பு லிங்கத்திற்கு அவரையறியாத ஒரு பூரிப்பும் உணர்ச்சியும் உண்டாகியது. ராஜாவை அவரும் தட்டிக்கொடுத்தவாறு, “டேய்! 301! அந்த ரிக்ஷாக்காரப் பெரிய மனிதனை லாக் கப்பிலிருந்து ஜாக்ரதையாக இழுத்துக்கொண்டு வா” என்று உத்திரவிட்டார்.

அடுத்த 5 நிமிஷத்திற்குள் ரிக்ஷாக்காரனை இரண்டு கான்ஸ்டேபில்கள் கைவிலங்குடன் பிடித்துக்கொண்டு வந்து நிறுத்தினார்கள். பேனா சொந்தக்காரன் இந்த ரிக்ஷாக்காரக் கைதியைக் கண்டதும் நடுநடுங்கித் தூக்கி வாரிப் போட்டதுபோல் துள்ளினான். அவனையறியாமல் “ஐயோ! முருகப்பனா?” என்று வாய்விட்டும் கத்திவிட்டான்.

இதைக்கண்ட பையன் ஒன்றுமே புரியாமல் இருவரையும் விரைக்கவிரைக்கப் பார்த்தபடியே, "ஏய்! ரிக்ஷாக்காரா! தமிழ்ப்பண்டிதர் உன்னைப் பிடிக்கும் முன்பு நீ என்னிடம் அஸல் ரிக்ஷாக்காரன்மாதிரி பேசினயா இல்லையா? இந்தப் பேனவை நான் இந்தப் பெரிய மனுஷர் வீட்டில் திருடிட்டேனும், சொல்ருரு. நீ உண்மையைச் சொல்லப்பா!" என்று அதட்டலாகக் கேட்டான்.

ரிக்ஷாக்காரன் கண்களில் தண்ணீர் மடமடவென்று வழிய தலை நிமிரவே இல்லை. ஜம்புலிங்கம் ராஜாராமனைத் தட்டிக்கொடுத்து, "பையா! இவர் இப்போது உன்னிடம் பேசமாட்டார். நான்தான் உனக்குச் சாட்சியிருக்கையில் உனக்கென்னடா பயம்? ரிக்ஷாக்காரன் வாயிலாக வர வேண்டுமானல்....என்பதற்குள், ரிக்ஷாக்காரன், இவர்களே ப்ரமிக்கும்படியாய், "ஸார்! இவன் பேன திருடவே இல்லை, ஸார்! இவனை நான் தெருவில் வெகு நேரமாகப் பார்த்துக்கொண்டுதான் மரத்தடியில் வண்டியோடு நின்றேன். இவன் நிரபராதி" என்று கூறியதைக்கேட்டுப் பேனவின் சொந்தக்காரன் அசந்து விட்டான். ராஜா பெரிய மகிழ்ச்சியுடன் சிரித்துக் குதித்தபடியே வெகு நாட்களாகப் பழகியதுபோல் ஜம்புலிங்கத்தின் இடுப்பைச் சுற்றிக் கட்டிக்கொண்டு சற்று கர்வத்துடன் நின்றசமயம் ஒரு கான்ஸ்டேபில் ஒரு பையனை இழுத்துக்கொண்டுவந்து, "ஸார்! ஒரு குழந்தையின் கைக்காப்பை இந்த சோதாப் பையன் திருடிவிட்டான். கையும்மெய்யுமாகப் பிடித்து வந்தேன்" என்று கூறியதைக் கேட்டதும் ராஜாராம் ஒரே கூக்குரலுடன், "ஸார்! ஸார்! இதோ; இந்தப் பையன்தான் இந்தப் பேனவைத் திருடிக்கொண்டு ஓடி வந்தான். தடுக்கி விழுந்துவிட்டபோது பேன கீழே விழுந்ததும், ஓடிவிட்டான். இவன்தான் ஸார்!"......என்று காட்டினன்.

பேனவின் சொந்தக்காரன் அந்தப்பையனைப் பார்த்ததும் அப்படியே தீயைமிதித்தவன்போல் அலறித்துடித்து "ஹா" என்று வாயைவிட்டுக் கத்திவிட்டான். ரிக்ஷாக்காரன் முகத்திலும் ஒருவிதமான அதிர்ச்சி சடக்கென்று தோன்றியது.

## 6

### கிணறு வெட்டப் பூதம் கிளம்பியது

பவானி அடக்க ஒடுக்கமான பெண். மரியாதையும் வணக்கமும் முகத்தில் புன்னகை தவழும் சுபாவமும் படைத்தவள். மிக்க கண்ணியம் வாய்ந்த உயர்ந்த குடும்பத்தில் பிறந்து உத்தமமான பெரிய குடும்பத்து மகனுகிய முருகப்பனுக்கு வாழ்க்கைப்பட்டு வெகுவெகு நல்ல முறையில் குடும்பத்தை நடத்தி, சிறந்த நன்மதிப்பும் பெயரும் பெற்றுவிட்டாள். ஆனல், அவளுடைய உள்மனத்தில் சாந்தி என்பதே காணப்படவில்லை! சதா ஒரு ஏக்கம்; துன்பப்புயலடித்துச் சோர்வு உண்டாக்கி வாடித் துடிக்கச் செய்யும் பரம ரகஸியத்தை அவள் பெற்ருேர்கூட அறிய மாட்டார்கள்.

இரண்டாந்தாரமாக வாழ்க்கைப்பட்டதன்பொருட்டு சிறிது கவலைகொண்டிருப்பாளோ என்று சிலர் நினைத்தார்கள். இருப்பினும் பிறருக்கு அவளுடைய உள்ளத்தில் செல்லரிக்கும் விஷயம் பகவானையன்றி மற்ற யாருமே அறியாதபடி கலகலப்பான புன்முறுவலும் குளிர்ந்த பேச்சும் எல்லோரையும் ப்ரமிக்கும்படியாகவே செய்தது.

சிறிய வயது முதல் பவானி பாடுவதிலும் நல்ல தேர்ச்சியே பெற்றிருந்ததால் அவளுடைய கல்யாணத்திற்கு முன்பு சிறிது போட்டிகூட உண்டாகியது. முருகப்பனுக்கு இவள் வாழ்க்கைப்படவே இவளுடைய சூழ்நிலைகளும் விதியும் அமைந்துவிட்டது என்பதை முதலில் யாருமே அறியவில்லை. பவானியின் மகத்தான பாக்யவசத்தின் பலனல் பெரிய இடத்தில் வாழ்க்கைப்பட்டுவிட்டாள் என்றே எல்லோரும் பேசிக்கொண்டார்கள். முருகப்பனுக்குப் பெயரளவில் இரண்டாங்கல்யாணமேயன்றி மூத்தவள் இரண்டு வருஷங்கள்கூட வாழவில்லை. அவளுடைய முடிவுக்குள் ஒரு பெண் குழந்தையையும் பெற்றுக்கொடுத்துவிட்டு வேண்டுமென்றே அவள் உயிரைவிட்ட ரகஸியம் யாருக்குமே தெரியாதபடி பூடகமாயமைந்துவிட்டது. காரணம் அவளுக்கு மட்டுந்தான் தெரிந்திருக்க வேண்டியது. எப்படியோ பவானிக்கும் தெரிந்துவிட்டது!

தான் குடும்பத்திற்கு வந்த புதிதில் ஒருதினம் தன் மாமியார் ஊருக்குப் போயிருந்த சமயத்தில் தன் மூத்தாளின் பெட்டிகளைத் திறந்து பார்க்க வேண்டுமென்ற ஆசை உண்டாகியது. அந்த ஆசைகூட வேறு வித்யாஸ எண்ணத்தினல் உண்டாகவில்லை. மூத்தவளின் குழந்தையாகிய

மீராபாயினிடம் இவள் வைத்துள்ள மாசிலாத அன்பு தூண்டியதால் மீராவின் தாயாருடைய புடவைகள், நகைகள் எல்லாம் மீராவுக்கு எத்தனை இருக்கிறதோ பார்க்க வேண்டும் என்கிற ப்ரீதிபூர்வகமான ஆவலால் குழந்தை தூங்கியதும் பகல் வேளையில் சிறிது ஒய்வு கிடைத்தசமயம் பெட்டியைத் திறந்தாள்.

புதிய மடிப்புக்கூட பிரிக்காத முறையில் புத்தப்புதிய புடவைகள்கூட சில இருந்தன. மற்றைப்படி உடுத்தியவிழ்த்த சில புடவைகளும் இருந்தன. நகைப்பெட்டியில் ஏதோ சில நகைகள் மட்டுந்தான் இருந்தன. நகைப் பெட்டியை மேலே பார்க்கும்போது அதற்குள் ஒரு கள்ள அறை இருப்பதாகவே சொல்ல முடியாது. அத்தனை பொருத்தமாக அமைந்திருக்கும் பெட்டியைப் பவானி வெகு ஆவலுடன் திருப்பித்திருப்பிப் பார்த்தாள். இந்தப் பெட்டியின் அமைப்பில் ஒட்டியாணம், வங்கி, நெக்லேஸ், காசுமாலை முதலிய பெரிய பெரிய நகைகள் வைப்பதற்கு இடங்கள் பொருத்தி இருந்தும் அந்த இடங்கள் காலியாக இருந்ததால் நகைகள் செய்து வைத்திருந்துதான் எடுத்து விட்டார்களோ; அன்றி இனி ஒரு காலத்தில் செய்தால் வைத்துக்கொள்ளுவதற்காக வாங்கியிருக்குமோ?....என்ற சந்தேகமே உண்டாகியது.

நம் கண்மணி மீராவுக்கு இந்தப் பெட்டி நிறைய நகைகளைச் செய்து அதையப்படியே அவளுக்கு அழகாகக் கொடுக்கவேண்டும் என்ற ஆவலுடன் பெட்டியிலிருந்த சில நகைகளை மட்டும் எடுத்துப் பார்த்தாள். பெட்டியின் உயர அளவுக்கும் அதிலிருக்கும் அறைகளின் அளவுக்கும் எப்படியோ ஒரு வித்யாஸமிருப்பதுபோல் பவானிக்குத் தோன்றியதால் வெகு கூர்மையாகக் கவனித்து நாற்புறமும் திருப்பித்திருப்பிப் பார்த்தாள்.

பளபளப்பான நல்ல நீல வெல்வெட்டினால் தைக்கப் பட்டிருந்த பாகத்தை அப்படியே ஆட்டியும் அசைத்தும் பார்த்தாள். அது சொருகுபெட்டிபோல் சொருகியிருந்ததால் ப்ரயாஸைப்பட்டுத் தனியே எடுத்துவிட்டாள். அதனடியில் நகை வைக்கக்கூடிய அளவு இடமில்லை. நோட்டுக்கள், காகிதங்கள், முக்யமான கடிதங்கள் இவைகள்தான் வைக்க முடியும். அந்த அளவுக்குத்தான் இடம் வட்ட வடிவமாக இருந்தது.

அதில் நூறு ரூபாய் நோட்டுக்கள் இரண்டும், அதோடு ஒரு கவரும்மட்டுமிருக்கக்கண்டு கவருக்குள்ளிருந்த கடிதத்

தைப் பிரித்தாள். என்ன ஆச்சரியம்! அதில் மூத்தவளுடைய சிறு புகைப்படத்தை ஒட்டி, அதன் கீழ், "சாந்தி! இன்றுடன் உன் மனம் நிம்மதியான சாந்தியடைந்துவிடும். உன் கணவன் கொலைகாரன் என்கிற வேதனை உன் மனத்தை ரம்பம் போட்டு அறுக்காது. உன் பெயரின் உண்மைப்படி சாந்தியை அடைந்துவிடு. அதற்கு வழி உன் விரல் வைர மோதிரம்தான். மீராவுக்காக வருந்தாதே; அதன் விதி அதற்கு" என்ற வரிகள் மட்டும் மொட்டையாக எழுதியிருந்ததைப் படித்ததும் இன்னதென்று விவரிக்கவியலாதபடி தேகமே தீப்பிடித்து எரிந்துவிடுவது போன்ற ஒரு வேகம் உண்டாகி உலகமே இருண்டும் தட்டாமாலை சுற்றுவதுபோலும் தோன்றி ஒரு குலுக்குக் குலுக்கி விட்டது!

பொருள் விளங்காத பூடகமான நிலைமையில் பேரிடி போன்ற விஷயத்தை மட்டும் அரைகுறையாகத் தெரிந்து கொண்ட அதிர்ச்சியில் அவள் இதயத்தில், "என் கணவன் கொலைகாரனா?....என் கணவன் கொலைகாரனா?....மூத்தவள் வைரத்தைத்தின்று இறந்தாள்?"........என்கிற எண்ணம் சம்மட்டியாலடிப்பதுபோல் பளார்பளார் என்று தாக்கி வதைக்கிறது. மார்பு வலிப்பதுபோல் வேறு வேதனை உண்டாகியது. தன் தலைவிதியின் பயங்கரம் மின்ஸாரம் போலத் தாக்கித் துடிக்கச் செய்யும் வேகத்தில் தன் நினைவே அழிந்து அப்படியே விழுந்துவிட்டாள்!

கிணறு வெட்டப் பூதம் கிளம்பியதுபோல் தன்னருமை மீராவின் எதிர்கால சந்தோஷத்திற்காகத் தேடப்புகுந்த இடத்தில் தன்னுயிரையும் சேர்த்துப் பலி வாங்கிவிடும் முறையில் வதைக்கக்கூடியவிதமான விஷம்போன்ற விஷயம் கிடைத்தால் எப்படிச் சமாளிக்க முடியும்? சில நிமிஷங்கள் வெள்ளத்தில் மூழ்கித்திணறுவதுபோலும், நெருப்பின் மத்தியில் தத்தளிப்பதுபோலும் தத்தளித்து, பிறகு, மீண்டும் சற்றுத் தெளிவு பெற்று, மறுபடி மறுபடி அந்தப் புகைப்படத்தையும் அதனடியில் ஈட்டிபோல் கண்ணைக்குத்தும் எழுத்துக்களையும் படித்தாள். அதே சமயம் தொட்டிலில் தூங்கும் மீரா அழும் குரல் கேட்ட பிறகுதான்....ஐயோ! குழந்தை கூட எழுந்திருக்கும் நேரமாகிவிட்டதா?....இத்தனை நேரமா நான் ப்ரமை பிடித்துப்போய் உட்கார்ந்திருந்தேன்? ஐயோ! என் கணவர் கொலைகாரரா? என் மூத்தவள் தற்கொலை புரிந்துகொண்டாளா?" என்ற வாக்யங்கள் இதயத்தை உலுக்கின.

கடிதத்தைப் பழையபடியே அந்தப்பெட்டியில் வைத்து அப்படியே சொருகி இன்னும் கெட்டிப்பட அழுத்தமாக இறுக்கிவிட்டுப் பெட்டியை ஜாக்ரதையாகப் பூட்டிவிட்டு ஓட்டமாக ஓடிவந்தாள். இதற்குள் குழந்தை அதிகமாக அழுதுவிட்டதால் அதற்குச் சற்றுக் கேவலும் திணறலும் உண்டாகிவிட்டது கண்டதும் எதனுலோ பவானிக்குத் துக்கம் பீறிக்கொண்டு வந்துவிட்டது. 'எங்கம்மா உயிருடன் இருந்தால் என்னையிப்படி அழவிடுவாளா?" என்று இந்தக்குழந்தை நினைத்துவிடுமோ?....என்கிற அதீதமான எண்ணம் உண்டாகி, ஏற்கெனவே புகையும் கலக்கத்தை நன்ருகப் பற்றவைத்ததுபோல் செய்துவிட்டது.

அடங்காத அழுகையுடன் "என் கண்ணே! மீரா! அழாதேடா ராஜா! இதோ வந்துவிட்டேன்" என்று எடுத்து மார்புடன் தழுவிக்கொண்டாள். முகத்தோடு முகம் பதித்தாள். தன்னைத்தான் சமாதானம் செய்து கொள்ள மாட்டாதவள் குழந்தையைச் சமாதானப்படுத்த எப்படி முடியும்? 7 மாதமே நிரம்பாத குழந்தைக்குத் தன் தாயைப்பற்றி என்ன தெரிய முடியும் என்ற எண்ணங்கூட மறந்துபோய்விட்டது. "கண்ணு! என்மீது கோபமா ராஜா! என்னைத்திட்டுகிருயா மீரா........நான் உன்னை அலக்ஷியம் செய்யவில்லை கண்ணு; கோபிக்காதே!"என்று தானே பயித்தியக்காரியைப்போல் சொல்லிக்கொண்டே குழந்தைக்கு ஆகாரத்தைக் கொடுத்துச் சமாதானம் செய்வதற்குள் வீட்டு வேலைக்காரி வந்துவிட்டாள்.

வேலைக்காரியைப் பார்த்ததும் குழந்தை சிரித்துக் கொண்டே அவளிடம் தாவியது கண்ட வேலம்மாள், "இன்ஞ ராசாத்தி! உங்கம்மாகிட்டேந்து என்கிட்ட வரயா! கத்துகிறியா நீ" என்று கூறியவாறு குழந்தையை எடுத்துக் கொண்டு உட்கார்ந்தாள். பவானியின் அதிர்ச்சியால் முகம் மாறுபட்டு ஏதோமாதிரி இருப்பதைக்கண்ட வேலம்மாள், "என்னம்மா உடம்புக்கு? மூஞ்சி எப்படியோ இருக்குதே? தலைவலி, ஜுரம் ஏதாச்சும் இருக்குதுங்களா?" என்று அன்புடன் கேட்டாள்.

கலங்கும் மனத்துடன் கண்ணீர் பொங்குகிற சமயம் அதைப்பற்றி யாராவது பேசினல் ப்ரமாத அழுகை வந்து விடுவது சகஜம். அதுபோல் பவானிக்கும் தொண்டையை அடைத்துவிட்டது. மெல்ல சமாளித்துக்கொண்டு, ஒன்றுமில்லை, வேலம்மமா! குழந்தையின் மழலைச்சொற்களையும் விளையாட்டையும் அதன் தாயார் இருந்து பார்த்தால்

எத்தனை சந்தோஷப்படுவாள்! 'அம்ம்ம்ம்மா!' என்று குழந்தை சொல்வதைக் கேட்காமல் போய்விட்டாளே என்று எண்ணினேன். கண்ணீர் மடமடவென்று வந்துவிட்டது.... ஏன் வேலம்மா! எத்தனைதான் நான் ப்ரீதியாக இருந்தாலும் அதன் பெற்ற தாயாரைப்போல ஆகுமா? நீ சொல்லேன். அவள் ஏன் சாகவேண்டும்? ஏன் இந்தக்குழந்தை பரதேசியாக ஆகவேண்டும்....வேலம்மா! இவம்மா என்ன உடம்புடன் இறந்தாள்? வெகு நாட்கள் படுத்திருந்தாளா? என்று கேட்டாள்.

வேல :—ஐயோ! கொள்ளேயே! படுக்கலே! கடக்கலேம்மா! ராத்திரி நான் வேலே எல்லாம் செஞ்சுட்டுப் போறப்போகூட வேலம்மான்னு வாய் நெறய கூப்பிட்டுப் பேசினுங்கம்மா! விடியற்காலே நான் வழக்கம்போல் சாணி தெளிக்க வருவதற்கு முன்னேயே ராத்திரி என்னமோ கால்ரா கண்டுச்சாம்....உடனே பூட்டாங்களாம். வெஷபேதியாம். ஓடனே கொண்ணுப்புட்டதுங்கன்னு ஆள் வந்திடுச்சம்மா. ஓடியாந்தேன். மூட்டிகிணு மோதிகிணு கதறினேன்....கிளியாட்டம் பொண்ணு பூட்டுது; இந்தக் கொயந்தெயின் பாவந்தான்" என்றாள்.

பவா :—ஐயோ பாவம்! அப்போ கால்ரா ஊரிலே இருந்துதா, வேலம்மா?

வேல :—ஊம்! இந்தம்மாளெ வாரிக்கிணு போவத்தான் வந்தது! ஊருலே ஒண்ணும் இல்லேம்மா! என்னமோ விசித்திரமாதான் பூட்டுது. செல பேரு வெஷங்குடிச்சுப் புட்டுதான்னுகூட பேசினுங்க!—

பவா :—என்ன வேலம்மா? விஷங்குடிப்பதற்கு அவளுக்கென்ன தலைவிதி? அவளுக்கென்ன குறைவு? கணவனும் மனைவியும் ஒற்றுமையாய் அன்பாக இருந்தார்களா இல்லையா? சண்டையோ! மனஸ்தாபமோ எதுவும் கிடையாதே?

வேல :—ஒண்ணுமே கெடயாதுங்க. பாக்ரத்துக்கு என்னமோ தேனும்பாலும்போலத்தானிருந்தாங்க. ஐயா எங்கேயோ ஊருக்குப்போய் வந்தாரு. வந்த மிக்காளுள் அம்மா ஒருமாதிரியாயிருந்தாங்க. ரெண்டு நாளேக்கெல்லாம் அம்மா திடீர்னு செத்துட்டாங்க. இதான் விசயம். எந்தப் பாம்பு எந்தப்புத்துலே இருக்குதோ? யாரு கண்டாங்கம்மா?

செத்தது என்னமோ ரொம்ப விசித்திரமாதான் செத்துட்டாங்க........இப்ப அதெப்பத்தி என்னத்துக்கம்மா" என்று அந்தப்பேச்சுக்கு அவளே முத்தாய்ப்புவைத்து முடித்து விட்டாள்.

அதே சமயம் வழக்கத்திற்கு விரோதமாய் முருகப்பன் வரும் மோட்டார் ஸைகல் ஓசையைக் கேட்டதும் வேலம்மாள் எழுந்து போய்விட்டாள். பவானி குழந்தையைத் தோளில் சாத்தியணைத்தபடியே இருந்தாள். கணவனைக் கண்ட உடனே அவளையறியாது....கொலைகாரனு? இவரா கொலை செய்திருப்பார்? இதென்ன அக்ரமம்?........என்ற நினைப்பும் அதிர்ச்சியும் குபீரென்று இதயத்தில் முற்றுகையிட்டு இரைவதுபோன்ற வேதனை உண்டாகி அவளையறியாமல் ஏதோ செய்த வேகத்தில், வழக்கப்படி புன்முறுவலுடன் கணவனை வரவேற்கும் உணர்ச்சி அற்றுவிட்டது.

முருகப்பன் வழக்கப்படி, "கண்ணு! மீரா!" என்றழைத்தபடியே குழந்தையை முதுகில் தட்டியபோதுதான் பவானி மிக ப்ரயாஸைப்பட்டுச் சிரிப்பை வரவழைத்துக் கொண்டு, "மீரா! அப்பா கூப்பிடுகிறூர் பாரு கண்ணு!" என்று குழந்தையின் முகத்தைத் திருப்பிக் காட்டினுள்.

தனது களங்கமற்ற இனிய வாயினுல் சிரித்தபடியே அவனிடம் தாவிச் சென்றது. "இன்றைக்கு என்ன இத்தனை சீக்கிரம் வந்துவிட்டீர்கள்?" என்று தன் உள்ளத்திலடிக்கும் புயல்களை எல்லாம் அடக்கிக்கொண்டு கேட்டபடியே அவன் பூட்ஸைக்கழற்றிப் பின் கோட்டையும் கழற்றிவிட்டு உள்ளே ஓடிக் காப்பி தயாரிப்பதிலீடுபட்டாள். கொலையா! கொலைகாரனு! இவரா கொலைகாரர்! என்கிற அதிர்ச்சி திடும்திடும் என்று தோன்றி வதைக்கும் வேகத்துடன் காப்பியைத் தயார் செய்து டிபனுடன் கொண்டுவந்து கொடுத்தாள்.

காப்பியை மட்டும் சாப்பிட்டுவிட்டு "எனக்கு டிபன் வேண்டாம், பவானி! தலைவலியாயிருக்கிறது....நான் சற்று நிம்மதியாகப் படுத்துக்கொள்கிறேன்" என்று கூறி மாடிக்குச் சென்றுவிட்டான். பின்னுலேயே சென்ற பவானி, "நான் தலையைப் பிடிக்கிறேன்" என்று கூறியவாறு தலைவலி தைலத்தைக்கொண்டு தடவிச் சற்று நேரம் பிடித்து விட்டாள்.

முருகப்பன் வாயையே திறக்காமல் மவுனமாகப் படுத்திருந்தானேயன்றி ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை.

பவானியாக ஏதேதோ கேட்கும்போது என்னைத், "தொந்தரவுபடுத்தாதே! எனக்கு ஓய்வு வேண்டும்" என்று கூறி விட்டதால் வேறு பேசாமல் பவானி வந்துவிட்டாள். தெளிந்த ஊற்றுப்போலிருந்த ஜலத்தில் ஒரு கல்லைப் போட்டதும் எப்படிச் சிதைவுற்றுக் கலங்கித் தத்தளிக்கின்றதோ அதேபோலத்தான் மனமாகிய குளமும் கலங்கி விடுகிறது!

பவானி அன்று முழுதும் இதைப்பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தாளேயன்றி யாரிடம் இந்த ரகஸியத்தைக் கேட்டறிய முடியும்? மறுதினம் இரவு ஏதோ பத்திரிகையை பவானி படிக்கும்பொழுது முருகப்பன் வந்தான். "என்ன பவானீ? ஏதோ பழைய பத்திரிகையைப் படிக்கிருய்? இன்றைய பத்திரிகை எங்கே போயிற்று? பழைய பத்திரிகையில் என்ன விஷயம் இருக்கிறது?" என்று கேட்டவாறு அருகில் வந்து உட்கார்ந்தான்.

எதனலோ பவானியின் உள்ளத்தில் ஒரு புதிய தெம்பும் சக்தியும் உண்டாகியதால் அவளையறியாமல் சடக்கென்று பேசத்தொடங்கி "இன்று பழைய பத்திரிகையாக இருக்கும்....அது அன்று புதிதாகத்தானே இருந்திருக்கும்! அதோடு சில மாதங்களுக்கு முன்பு ஏதோ ஒரு கொலைக் கேஸ் வெகு ஸ்வாரஸ்யமானது பத்திரிகையில் வந்ததாயும் தாம் படித்ததாயும் இன்று உங்கள் மாமி வந்திருக்கையில் சொன்னர். அதனல் பழைய பத்திரிகைகளைப் புரட்டுகிறேன். நம் வீட்டில் பேப்பர்களை உடனே கடைக்காரனுக்குப் போடாததால் பழைய விஷயங்களைப் பார்க்க முடிகிறது" என்று முடிப்பதற்குள்,

முருகப்பனின் முகத்தில் உண்டாகிய மாறுதல்களையும் பவானி நன்ருகக் கவனித்துவிட்டாள். அவன் எத்தகைய பதிலும் சொல்லாமல் மாறுபட்ட முகத்துடன் நிற்பதைக் கண்டதும் உள்ளுக்குள் ஏதோ வேலை செய்யத் தொடங்கியது. மீண்டும் தானே பேசத்தொடங்கி, "இந்தக்கொலை விஷயம் எந்த மாதப்பேப்பரில் வந்திருக்கிறது? உங்களுக்குத் தெரியுமா? நீங்கள் படித்திருப்பீர்களல்லவா! வெகு ரஸமான கொலை வழக்காமே! கதையில் வருவதுபோல் அத்தனை ருசிகரமாக இருக்கிறதாமே! நீங்கள் படித்திருந்தால் சொல்லிவிடுங்களேன்! படிக்கும் நேரத்தில் ஸ்வாரஸ்யமாய் விஷயத்தைக் கேட்டறியலாம்! என்று சாதுர்யமாகக் கேட்டாள்.

முருகப்பன் ஒருமாதிரி கோபம் ஜ்வலிக்கப் பார்த்தபடி "பவானீ! இந்தப்பத்திரிகைப் படிப்பும் கொலை விஷயமும் எனக்குக் கட்டோடு பிடிக்காது. இந்த உதவாக்கரை விஷயங்களை எல்லாம் நீ படித்தறிந்து உனக்கென்ன ஆக வேண்டும்?" என்று சீறி விழுவதுபோல் சொன்னான்.

பவா:—எனக் காகவேண்டிய விஷயங்கள் ஏராளமா யிருக்கிறது. அதனால்தான் கேட்கிறேன். எனக்குக் கதை எழுதுவதென்றால் சிறிய வயது முதல் மிகமிக ஆசை. சிறு கதைகள் நான் எத்தனையோ எழுதியிருக்கிறேன்.

முரு:—என்ன! என்ன! நீ கதை எழுதியிருக்கிறாயா? இதென்ன வேடிக்கை செய்கிறாயா? கதை எழுதுவதென்றால் கிள்ளுக்கீரையான விஷயமா? என்னிடமே ஏய்க்கிறாயே? எங்கே நீ எழுதிய கதைகளைக் காட்டு.

பவா:—உங்களிடமே நான் பொய் சொல்வதென்றால் என்னிடம் மெய் என்கிற பதமே இருக்க நியாயமில்லையே! எனது ப்ரத்யக்ஷ தெய்வமாகிய உங்களிடமா பொய் சொல்லப்போகிறேன். எனது தூரத்து உறவில் மாமா முறையாக வேண்டிய ஒரு பெரிய நிபுணர் போலீஸ் வேலையிலிருக்கிறார். அவர் துப்பறியும் புலி என்கிற பட்டம் பெற்றவர்....என்ற வார்த்தைகளை அவள் சொல்லும்போதே முருகப்பனின் முகரேகைகளில் மாறுதல்களும் துடிதுடிப்பும் உண்டாகி வெயர்வையும் கொட்டத் தொடங்கியது.

மேலும் பவானி அதையும் கவனித்தவாறே பேசத் தொடங்கி....அவருடைய வீட்டிற்கு நாங்களும் அடிக்கடி செல்வோம். அவரும் வருவார். நம் கல்யாணத்தின்போது ஒரு முக்யமான மோசடி வழக்கைக் கண்டுபிடிப்பதற்காகப் பினங்கிற்குச் சென்றிருந்ததால் அவர் வரவில்லை. அவர் அனேக விஷயங்களை நேரில் நடந்ததை விசித்திரமாகக் கூறுவார். அவைகளில் எதையாவது கற்பனைக் கயிறு திரித்து சிறுகதை எழுதியிருக்கிறேன். என் பெயரில் நடு எழுத்தை எடுத்துவிட்டு பனி என்கிற புனைப்பெயரில் நான் எழுதுவதை என் பெற்றோர்கள்கூட அறியமாட்டார்கள்! என்பதற்குள், "ஹா....பனி என்று எழுதுகிறது நீயா? பனி என்றால் எவனோ! ஆண் மகனின் பெயர் என்றல்லவா நினைத்தேன். பழிக்குப்பழி என்கிற சிறுகதை "உலக்கை" என்கிற பத்திரிகையில் வந்திருந்ததே. அதற்குப் பரிசு கூட கிடைத்ததாக வெளியிட்டிருந்ததே. அது நீயா எழுதியது!" என்று திகைப்புடன் கேட்டு ப்ரமித்து நின்றான்.

ஏன்! அந்தக் கதை நன்றாயில்லையா! உங்களுக்குப் பிடிக்கவில்லையா! அதற்காகப் பரிசுகொடுத்த பதக்கத்தைக்கூட நான் உங்கள் கடிகாரச் சங்கிலியில் இணைத்து விடலாம் என்றிருக்கிறேன். என்பதற்குள், "போதும்! உன் கதையழகும் பரிசு பெற்ற அழகும். கண்ட தடியன்களும் ப்ரமாதமாய் உன்னைப்பற்றித் தோத்திரம் செய்து எழுதியிருந்த வயற்றெரிச்சலை என்னல் தாங்கமுடியாது. பனி என்ற பெயர் யாரோ ஆண் பிள்ளையின் பெயர் என்று நான் ஏமாந்ததுபோதும். எனக்கு இந்த விஷயமே பிடிக்கவில்லை. உன்மேல் நான் சந்தேஹங்கூடப்படுகிறேன். உன்னைப்பற்றி நான் இது வரையில் எண்ணியிருந்த அபிப்ராயமெல்லாம் முட்டாள்தனமாகிவிட்டது என்று இப்போது தோன்றுகிறது" என்று முன்பின் யோசிக்காமல் காரணமே கூறுமல், நல்ல காரியத்தின் சிறப்பைத் தீய காரியமாக எண்ணி, மனம்போனவாறு கூறிவிட்டுச் சடக்கென்று வெளியே போகக்கிளம்புவதைக் கண்ட பவானி ஒரே பாய்ச்சலில் பாய்ந்து அவனைத் தடுத்துப்போகவிடாமல் காலைக்கட்டிக்கொண்டு, "இதென்ன அனர்த்தமான வார்த்தைகளும் எண்ணங்களும் கூறிய பாணம்போலப் பாய்கிறது! இச்செய்கையின் பயன் என்னவாகுமென்று எண்ணிப் பார்த்தீர்களா! மூத்தவளுக்குத் துணையாய் என்னையும் அனுப்பிவிடவா தீர்மானம்? என் கலைத் தொண்டுக்குப் பரிசு தாங்களளிப்பது இதுதான! மகத்தான கொலையைச் செய்தவர்களெல்லாம் உலகத்தில் ஒரு வித குற்றமும் செய்யாதவர்கள்போல் உலாவுகிற இவ்வுலகத்தில் குற்றமென்கிற பதத்திற்கே இடமில்லாத தூய கலாஸேவைக்கு இலக்காகிய நான குற்றவாளி! என்மீதா களங்கம்...என்று பதறியவாறு கூறிவிட்டாள்.

கொலை என்கிற பதத்தைக் கேட்டதுமே முருகப்பனின் முகம் பயங்கரமாக மாறியதுகண்டு ஏற்கெனவே மனத்தை வாட்டும் சந்தேகம், கவலை முதலியன ஊர்ஜிதமாகி ஒரு கலக்குக்கலக்கி வைத்தது. முருகப்பன் எதனுலோ மறுபேச்சின்றி படுக்கையில் தடாரென்று படுத்தான். அவன் முகத்தில் இருள் கவ்வியதுபோல் பவானிக்குத் தோன்றியது.

எத்தகைய விசேஷமுமின்றி மேலும் சில நாட்கள் சென்று மறைந்தன. ஆனல் தம்பதிகளுக்குள் ஏற்பட்ட சிறுகலவரம் வெளியாரறியாவிடினும்உள்ளுக்குள் புகைந்து கொண்டுதானிருந்தது. சிறிய கரைபடிந்துள்ள அழுக்கை

அகற்றவேமாட்டாது மிக்கவேதனையுடன் பவானியின் உள்ளம் விம்மி வெடித்துவிடுவதுபோலிருந்தது.

அன்று இரவு அவளுடைய வேதனையின் வேகத்தில் தான் எழுதியிருந்த சிறு கதைகளின் கை எழுத்துப்ரதிகளை எல்லாம் எடுத்து ஒரு முறை பார்த்தாள். எத்தனையோ உத்க்ருஷ்டமான கலையாகிய இதன்மீதா அவர் இத்தகைய பழியைச் சுமத்தி மனத்தைத் துளைத்துப் புண்ணாக்கி விட்டார். சீ! என் வாழ்வுப் பாதையைக் கரடுமுரடாக்கி முள்ளும் கண்ணுடித் துண்டும் பொத்தும்படிச் செய்துவிட்டக் கதையை இனி எழுதுவதா!....கடவுளே! இது உனக்குப் பொருக்குமா! என்று கண்ணீர் விட்டவாறு அந்தப் பழய காகிதக்கட்டுகளை அப்படியே கொளுத்தி விடலாமா என்று குமுறினுள்.

தன் போக்காக விளையாடிக்கொண்டிருக்கும் மீரா தவழ்ந்துவந்து அதே காகிதக்கட்டுகளை எடுத்துக் குழந்தைகளின் சுபாவப்படிக்கு வாயில்வைத்துக் கடித்தும் நக்கியும் சப்பியும் பெரிதாகச்சிரித்த காட்சியைக்கண்ட பவானிக்கு மனது ஏதோமாதிரி பூரித்துவிட்டது. கண்ணா! களங்கமற்ற உனக்கு இக் காகிதங்கள் சுவையாக இருக்கிறதா! துல்லியமான உனக்கு இவைகள் தேன்போல் இனிக்கிறதா! உலகமறியாத உனக்கு இனிப்பதுபோலத்தான் என் மனத்திற்கும் இனித்து என்னிதயத்தில் தேன் ஊற்றுப்போல் இன்னமும் சுரக்கிறது. ஆனல் உன் பிதாவுக்கு இது வெறும் வேப்பெண்ணெய்-எட்டிக்காய்—போலிருக்கிறதே என் செய்வேன்....கண்மணி மீரா! இவைகளைக் கொளுத்திவிடட்டுமா! என்று பொங்கிவரும் துக்கத்துடன் கேட்கும்போது கண்ணீர் மளமளவென்று வழிந்துவிட்டது.

இவள் கேட்பது என்னவென்றே அறியாத குழந்தை காகிதத்தை வாயில் சுவைத்து எடுத்து நாஉஎன்று தனக்குத்தானே குளரியது அந்த நாஉ என்கிற வார்த்தையைக் குழந்தையின்மூலம் கடவுளே சொல்லித் தன்னை எச்சரிப்பதுபோன்ற ஒரு எண்ணம் தோன்றியதும் சடக்கென்று அத்தனை எழுத்து ப்ரதிகளையும் எடுத்து ஒன்ருகக் கட்டி அதையப்படியே பத்திரப்படுத்தி வைத்துவிட்டுக் குழந்தையை வாரியணைத்துமுத்தமிட்டுப்பின் படுக்கையில் பக்கத்தில்விட்டு அணைத்துக்கொண்டாள்.

எக்காரணம்பற்றியோ தன் கணவன் மூன்று நாட்களாகிவிட்டது வீட்டிற்கே வரவில்லை. தன் மாமி

யாரும் பயிர் சம்மந்தமாய் ஊருக்குப்போயிருப்பதால் இவள் மனம் புழுவாய்த் துடிக்கும் வேதனையை பகவான் தானறியவேண்டுமேயன்றி பிறர் எப்படி அறிய முடியும்.

மறுதினம் இவள் சற்றும் எதிர்பாராத விதம் இவளுடைய தகப்பனார் ஊரிலிருந்து வந்ததைக்கண்டு வியப்பும் திகைப்புமாகிவிட்டது வாருங்கப்பா! ஏது. கடிதமே போடாமல் திடும்ப்ரவேசமாக வந்திருக்கிறீர்கள். வீட்டில் எல்லோரும் சவுக்யந்தானே! தம்பி நல்லாப் படிக்கிறானா! அக்காவிடமிருந்து காகிதம்வருதா! அம்மா தெம்பாக இருக்கிறார்களா! என்னுடைய ப்ரியமான கன்னுக்குட்டி நன்றாக இருக்கிறதா! இன்னும் பருத்து வளர்ந்திருக்கிறதா என்று மேலே மேலே தன்னுடைய ஆர்வங்கள் பூராவையுங் காட்டி விசாரிப்பதிலிருந்தாளேயன்றி அவளுக்கு வேறொன்றும் தோன்றவில்லை.

வந்தவருடைய முகத்தில் தேங்கிக்கிடக்கும் மகத்தான கவலைக் குறிகளை சில வினாடிகள் கழித்தே பார்த்ததும் திடுக்கிட்டவளாய், "என்னப்பா! ஏதோமாதிரி இருக்கிறீர்கள். என்ன விஷயம்?" என்று தானும் அபாரமான கவலையுடன் கேட்டாள். "பவானி! விஷயம் என்பதற்குப் பதில் வாழ்க்கையில் விஷம்கலந்துவிட்டது என்று கூறலாம் உன் கணவன் எங்கே?" என்று கேட்கும்போது பவானியைத் தூக்கி எரிமலையில்போட்டது போலிருந்தது. உடல்வியர்க்கவிலுவிலுக்க, "ஏம்பா! என்னவிஷயம்? அவர் எங்கு போயிருக்கிறார் என்று தெரியாது. இன்றோடு மூன்று நாட்களாகிறது. அவர் வீட்டிற்கே வராததால் எங்காவது ஊருக்குப் போயிருக்கிறாரோ! என்று எண்ணுகிறேன். என்னிடம் ஒன்றுமே சொல்லவில்லை. ஏம்பா! எதற்குக் கேட்கிறீர்கள். நானும் அது விஷயமாய்த்தான் கவலைப்பட்டுக்கொண்டிருக்கிறேன்." என்று நடுங்கியவாறு கேட்டாள்.

தொண்டையை அடைக்கும் துக்கத்துடன், "பவானீ! எனக்கு உலகமே தட்டாமலைசுற்றுவதுபோல் சுற்றுகிறது! நாசமாப்போன பணத்தையும் பகட்டையும் பார்த்து ஒரு கல்யாணத்தரகனின் வலையில் வீழ்ந்து உன்னை நான் இங்குக்கொண்டு தள்ளிவிட்ட வயிற்றெரிச்சலை இப்போது தான் உணர்ந்து துடிக்கிறேன். உன் வாழ்வுக்கே மகத்தான ஆபத்தல்லவா வந்துவிட்டது. உன் கணவன் ஒரு கொலைகாரனம்மா!"....என்று கூறிமுடிப்பதற்குள் "என்ன! என்ன! என் கணவர் கொலைகாரரா! கொலை

காரணு....இது உண்மையா அப்பா? ஐயையோ! சில தினங்களுக்குமுன்பு இந்த விஷயமாகிய விஷவிதை என்னிதயத்தில் பதிந்ததை என்னுல் அகற்றமுடியாது தவிக்கும் வேகத்தில் எனக்கும் அவருக்கும்கூட சில விஷயங்களில் சிறிய மனஸ்தாபமும் அபிப்ராயபேதமும் உண்டாகியது. நான் அதைப்பற்றியே கலங்குகையில் நீங்கள் வேறு சொல்கிறீர்களே! என்ன விஷயம் அப்பா! அவர் இப்பொழுது எங்கிருக்கிருர்?" என்று கண்ணீர் பெருகக் கேட்டாள்.

பவானீ! அவன் செய்ததும் செய்யாததும் கடவுளுக்குத்தான் தெரியுமேயன்றி மனிதர்களுக்குத் தெரியாதம்மா! நேற்றிரவு 2 மணிக்கு எனக்கு இந்த அனியாயத் தகவலை நமது உறவு போலீஸ் உத்யோகஸ்தர் நேரிடையாக வந்து தெரிவித்து வருந்தினர். மனிதன் தலைமறைவாக ஓடிவிட்டிருக்கிருன். போலீஸார் பலமாகத் தேடுகிருர்கள். எப்படியும் கண்டுபிடித்து விடுவார்கள். பல ஊர்களுக்குத் தகவல் கொடுத்திருக்கிருர்கள். அவன் சாமர்த்தியமாய்த் தப்பித் தலை மறைவாயிருப்பதே நலம். அப்படி உங்கள் கண்களில் பட்டாலும் சரி. வீட்டிற்குள்ளேயே ஒளிந்திருந்தாலும் சரி. அவனை அடையாளமே கண்டுகொள்ள முடியாதவிதம் மாறுவேஷமணிந்து எங்கேனும் கப்பலேறியாவது ஓடிவிடச் சொல்லுங்கள். 'இந்த அதிர்ச்சியை பவானி எப்படித் தாங்குவாளோ? முதலில் அங்கு நேரில் சென்று பார்த்துச் சகல விஷயங்களையும் தெரிந்துகொண்டு வாருங்கள்' என்று அவர் தயவு வைத்து தன் தொழிலுக்கு விரோதமாய்—நியாயத்திற்கு விரோதமாய்க்—கூறினர். என் மனந்தாங்காது உடனே ஓடிவந்தேன் என்று இவர் சொல்லி முடிப்பதற்குள் பவானி, உண்மையில் சிறுகச்சிறுக உளுத்துப்போயுள்ள உள்ளத்துடனிருந்தவள், இந்த அதிர்ச்சி தாளாது அப்படியே மூர்ச்சையாகி வேரற்ற மரம்போல விழுந்துவிட்டாள். தவித்துத் தத்தளித்து வந்துள்ள அவள் பிதாவின் நிலைமை மோசமாகி கதி கலங்கிவிட்டது.

யோகி சுத்தானந்தபாரதியார் இயற்றிய

**காந்தி கீர்த்தனம்**

350 பக்கங்கள். ரூ. 3—8—0.

உதயசிய கிளேஸ் புதிப்பு

இதைப் படித்தால் வாழ்க்கை புனிதமுறும்; சக்திபெறும்.
இப் பதிப்பின் லாபம் மகாத்மாஜி சேவா சங்க
இலவசச் சம்பள நிதிக்கே

18389
சென்னை 600 009

அரிய தமிழ் விருந்து (தொடர்ச்சி)

## ராணி சீலாவதி

வை. மு. ஸ்ரீநிவாஸன், M.A.B.L.
நான்காவது நவீனம் - ரூ-1/-

1. உபன்யாசமும் உதாசீனமும் 2 பேய்க்குக் கள் வார்த்த கதைதான் 3 வாக்கு பலித்தது—விபரீத யாத்திரையே 4 நிந்தனையும் நிபந்தனையும். 5. உவமையும் உவகையும் 6 வாழ்க்கைத் தோட்டத்தில் மலர்ந்த இதழ். 7. மடமையும் கடமையும்—சூழ்ச்சியின் வீழ்ச்சி 8 இனம் இனத்தைச் சேரும்—தூபமும் தாபமும் 9 விதையும் அறுவடையும் 10 தியாகச் சிகரம்—கடமையின் புண்ணிய வடிவம் 11. சீலாவதியும் சிலாவதியும் 12 ராஜரிஷியின் இதய கீதம்

## பெண்மணிக்கனல்

சரித்திரஜோதி

வை. மு. ஸ்ரீநிவாஸன், M.A.B.L.
ஐந்தாவது சித்திரம் ரூ 1/-

சரித்திரஜோதி—1 ஸ்தலமும் காலமும் 2 அஸ்திவாரம் 3 கபடநாடகமும் சூழ்ச்சிமேல்சூழ்ச்சியும் 4 இறுதிமொழியும் உறுதிப்பாடும் 5 சிங்கமும் புலியும் 6 வீழ்ச்சியும் மீட்சியும்

"கண்முனே காட்டினுள் பெண்மணிக்கனலை, பெண் சக்தியின் சிறப்பை, குன்ரு உறுதியின் எல்லையை, மன முண்டானால் மார்க்கமுண்டு என்ற உண்மையை! இந்திய சமஸ்தானங்களுள் பலவிதத்திலும் முன்னணியில் நிற்கும் மேன்மையை இன்று மைசூர் பெற்றிருப்பதற்கு உண்மையான அஸ்திவாரமிட்டவள் மாதராசி லக்ஷ்மி அம்மணியே!"

## இருளில் ஒளி

வை. மு. ஸ்ரீநிவாஸன், M.A.B.L.
ஆருவது சுடர் ரூ. 1.4.0

முதல் பகம்—1 இருளில் ஒளி 2 திருமகளின் திருவருள் 3 கனியும் கன்னியும் 4- உள்ளும் புறமும் 5 உள்ளொளி 6. மனநிம்மதி 7 ஒளியும் ஒலியும்

இரண்டாம் பாகம்—1 ஒருபக்தனின் சந்தேகநிவ்ருத்தி 2 கோலும் கொடியும் 3 லகுவான உபாயம் 4. முடிவும் நடுவும் 5 தெய்விக இசையின் அத்புத சக்தி 6. மலையில் மலை 7 கோபியரும் உத்தவரும்

## ஜகன்மோகினி வெளியீடுகள் தற்போது கைவசமுள்ள.

## வை. மு. கோ.

### நாவல்கள்

1. வைதேகி ரூ. 4—8
7. கோபாலரத்னம் 1—4
11. வீரவஸந்தா 1—0
15. நளினசேகரன் 1—0
25. பக்ஷமாலிகா 0-12
35. அனாதைப் பெண் 1-12
42. உளுத்த இதயம் 0—8
43. மகிழ்ச்சி உதயம் 1—4
45. மாலதி 1—0
46. வத்ஸகுமார் 1—0
49. படகோட்டி 1—2
50. ஆத்ம சக்தி 2—0
51. உணர்ச்சி வெள்ளம் 2—8
52. சந்தோஷமலர் 2—0
53. கருணாலயம் 2—0
54. புகழ்மாலை 1 12
56. சுடர் விளக்கு 0 12
57. கலாநிலயம் 1 12
58. ஞானதீபம் 2—4
59. வாத்ஸல்யம் 2—0
60. க்ருபாமந்திர் —4
61. மதுரகீதம் 2—0
62. பிரார்த்தனை 1—0
64. மலர்ந்த இதழ் 2—8
65. அமுத மொழி (சாதா) 2—0
    ” (கிளேஸ்) 2—8
66. பிரதிக்ஞை 1—0
67. ஆசைப்ரவாகம் 2—0
69. அபராதி 1—2
70. வெளுத்த வானம் 2—0
71. ப்ரதிபலன் 1—8
72. பவித்திரப்பதுமை 1—8
73. பெண் தர்மம் 1—0
74. உண்மைச் சித்திரம் 1—0
75. தெய்வீக ஒளி 2—0
76. சிலாசாஸனம் 1 12
77. புதுமைக்கோயில் 1—4
78. மனத்தாமரை (மலிவு) 1—0
79. தபால்விநோதம் 1—0
80. ஓவியப்பரிசு 1—8
81. இனிய முரசு 1—0
82. ஆண்டவனின் அருள் 1—0
83. இசைப்புயல் 1—8
85. காலக்கண்ணாடி 1—8
86. ஜெயபேரிகை 1—8
87. ஜீவநாடி 2—0
88. வீராங்கனை 1-12
89. கானகலா 0—8
90. தூய உள்ளம் 0—8
91. ஸௌபாக்யவதி 0—8
92. ப்ரேமாச்ரமம் 0-12
93. நியாயமழை 0--12
94. அருணோதயம்* 0--12
95. மனச்சாட்சி 0--12
96. ப்ரபஞ்சலீலை 0—8
97. வெற்றிப் பரிசு 0—8
98. ரோஜாமலர் 0—8
99. இந்திரமோஹனா* 1—0
100. பாதாஞ்ஜலி 2—0
101. அமைதியின் அஸ்திவாரம் 1-12
102. நம்பிக்கைப் பாலம் 1—8
103. சாந்தியின் சிகரம் 4—0
104. கடமையின் எல்லை 1--12
105. குலதனம் 0-12
106. தைரிய லக்ஷ்மி 0—8
107. சுதந்தரப் பறவை 1—8
108. நிர்மல நீரோடை 3—0
109. குணக் குன்று 2—0
110. புனித பவனம் 2—0

*நாடகம்

---

வை. மு. பத்மினி ஸ்ரீநிவாஸன
பாலர் மோகினி
12 சிறு கதைகள் 1—0

---

ப்ர. ப. அண்ணங்கராசார்யர் உரையுடன்
ஸ்ரீவிஷ்ணுஸஹஸ்ரநாமம் 1—0
அபூர்வ ராமாயணம் 1—8

---

யோகி சுத்தானந்த பாரதியார்
காந்தி கீர்த்தனம் 3—8

---

JAGANMOHINI, owned and edited by V. M. KOTHAI-NAYAKIAMMAL is printed & published by V. M. PARTHA-SARATHY at the Jagan Mohini Press, 26, Car St., Triplicane, Madras 5.